Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 27 சனிக்கிழமை (13.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 074

## நிலையான அபிவிருத்தியும் நீடித்த அரசியல் உரிமையும் கிடைக்க அணிதிரள வேண்டும்




வடக்கு மக்களின் நீடித்த அரசியல் உரிமையையும், அபிவிருத்தியையும் வாழ்வாதார மேம்பாட்டையும் தொடர்வதற்கு அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அதிகாரத்திலுள்ளவர்களுக்கும், அதிகாரத்தை கைப்பற்றக் கூடியவர்களுக்கும் மக்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும்.

(19) ஆம் பக்கம் பார்க்க...

## பயணிகள் பஸ் வழிமறிப்பு; சாரதி மீது தாக்குதல்

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்குச் சென்ற தனியார் பயணிகள் பஸ்ஸை பளைப் பகுதியில் இடைமறித்த சிலர் அதன் சாரதியைக் கடுமையாகத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் நேற்று மாலை 4.40 மணியளவில் இடம்பெற்றது.

ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வந்த 7 பேர் கொண்ட இளைஞர் குழு ஒன்றே பஸ்ஸை மறித்து சாரதி மீது தாக்குதல் நடத்தியது என்று

(19) ஆம் பக்கம் பார்க்க...

## ஹிருணிகா வெளிநாடு பயணம்

மேல்மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர, தனது தாயுடன் வெளிநாடொன்றுக்குப் பயணமாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி தகவலை முல்லேரியா பிரதேச சபைத் தலைவர் சோலங்க ஆராச்சி வெளியிட்டுள்ளார்.

ஹிருணிகா எதிர்க் கட்சியில் இணைந்து கொண்டதால், அவருக்கு பல இன்னல்களும், கஷ்டங்களும் ஏற்படுத்தப்படுகின்றன. இதனால் அவர் வெளிநாடு சென்றுள்ளார். ஆனால், அவர்

(19) ஆம் பக்கம் பார்க்க...

# விபத்தில் சிக்கியது விமானப்படை விமானம்

## ஸ்தலத்தில் நால்வர் பலி



கொழும்புக்கு வெளியே அத்துருகிரியவில் நேற்று இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான அன்ரனோ-32 ரக விமானம் ஒன்று விபத்திற்குள்ளானதில் அதில் பயணித்த இரு விமானிகள் உட்பட 4 பேர் பலியானார்கள். மற்றுமொருவர் தீக்காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 6.30 மணிளவில் கட்டுநாயக்கா விமானப் படை தளத்திலிருந்து இரத்மலானை விமானப் படைத்தளத்திற்கு புறப்பட்டு சில நிமிடங்களில் அத்துருகிரிய பகுதியிலுள்ள கோகந்த என்னுமிடத்திலுள்ள ரப்பர் தோட்டமொன்றில் இந்த விமானம் விழுந்து தீப்பற்றி எரிந்துள்ளது.

விமானமோட்டி விமானப் படைத்தள கட்டுப்பாட்டு பிரிவுடன் இறுதியாகத் தொடர்பு கொண்ட போது அதிக பனி மூட்டம் காணப்படுவதாக தெரிவித்திருந்ததாக விமானப்படை தகவல்கள் தெரிவிக்கின்றன.

காட்சிகள் தெளிவின்மையே இந்த விபத்திற்கு காரணமாக இருக்கலாம் என்று சிவில் விமானப் போக்குவரத்துப் பிரிவு கூறுகின்றது.

விமான விபத்து இடம் பெற்ற பகுதி மக்கள் குடியிருப்பு பிரதேசமாகவுள்ள போதிலும் குடியிருப்புகள் இல்லாத தோட்டமொன்றிலே விமானம் விழுந்து தீப்பற்றி எரிந்துள்ளது. சம்பவத்தில் ஒரு சில வீடுகளின் கூரைகள் சேதத்திற்குள்ளாகியுள்ளன

இந்தச் சம்பவம் தொடர்பாக விமானப்படை மற்றும் பொலிஸார் தனித்தனி விசாரணைகளை

(19) ஆம் பக்கம் பார்க்க...

## தேர்தல் விதிகளை மீறும் அதிகாரிகளுக்கு ஆப்பு

### எதிரணியின் கறுப்புப் புத்தகத்தில் பெயர்

தேர்தல் சட்டங்களை மீறும் அரச அதிகாரிகள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கு கறுப்பு புத்தகம் 'பிளாக் புக்' ஐ அறிமுகம் செய்த பொது எதிரணி, இந்தப் புத்தகத்தில் சேமிக்கப்படும் தகவல்களை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு வாராந்தம் அனுப்பவும் தீர்மானித்துள்ளது.

அத்துடன், அரச அதிகாரிகள்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## பதவியேற்றார் அமீர் அலி

அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அமீர் அலி நேற்று நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றுக்கொண்டார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## வானொலி அறிவிப்பாளர் மீது நேற்று இரவு தாக்குதல்

யாழ்.எப்.எம். வானொலியின் பெண் அறிவிப்பாளர் ஒருவர் மீது இனந்தெரியாத நபர் ஒருவர் நேற்று இரவு தாக்குதல் நடத்தியுள்ளார்.

அரியாலைப் பகுதியில் வைத்து இரவு 7.00 மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க...

## ஊடக ஆரோக்கியத்தை பாதுகாக்க ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கோரிக்கை


### இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மகஜர்

நாட்டில் ஊடக செயற்பாட்டின் ஆரோக்கியமான நிலைமை களைக் கருத்தில் கொண்டு பதவிக்கு வருகின்ற ஜனாதிபதி வேட்பாளர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் போட்டியிடுகின்ற அபேட்சகர்களிடம் முக்கியமான பல விடயங்களை உள்ளடக்கிய வேண்டுகோள் அடங்கிய மகஜர் ஒன்றை எட்டு ஊடக அமைப்புக்கள் கூட்டாக கையளித்துள்ளன. இந்த வேண்டுகோள் பிரதான அபேட்சகர்களான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அபேட்சகர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அச்சு ஊடக பிரதானிகளான பத்திரிகை வெளியீட்டாளர்கள், பத்திரிகைகளின் ஆசிரியர்கள், ஊடக அமைப்புக்கள், ஊடக செயற்பாட்டாளர்கள் உட்பட முக்கிய பிரதிநிதிகள் கையொப்பமிட்டே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ஊடக சுதந்திரத்திற்கு தடையாகவும் கட்டுப்பாடு விதிக்கும் வகையிலும் 1995 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து வரும் சட்டங்கள், கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தளர்த்தல், தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வருதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக

(19) ஆம் பக்கம் பார்க்க...



## சிறுவிளம்பரங்கள்

### புத்தகங்கள்

வவுனியா, கிளிநொச்சி மற்றும் வேறு இடங்களில் புதிதாக வாசிகசாலை, சனசமூக நிலையம் திறப்பவர்களுக்கு தமிழ், ஆங்கில புத்தகங்கள் இனாமாக வழங்கப்படும்.

**தொடர்பு:- 021 492 5047**
**(பி.ப. 3 மணிக்கு பின்பு)**

(R/382)

### டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680, 077 592 5088.

(C/3589)


# வவுனியா மாவட்டத்தில் வெள்ளத்தால் 878 குடும்பங்கள் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக 878 குடும்பங்களைச் சேர்ந்த 3004 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, நெடுங்கேணி, செட்டிக்குளம் போன்ற பகுதிகளில் உள்ள பல கிராமங்களில் இந்த வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 18 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன், 720 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

அத்தோடு சுமார் 320 ஏக்கர் விவசாய நிலம் , சேதமடைந்துள்ளதுடன், 300 ஏக்கருக்கு மேற்பட்ட மேட்டுநிலப பயிர்ச்செய்கையும் பாதிப்படைந்துள்ளது.

இதனால் இதனை நம்பியுள்ளோர் வாழவாதாரத்தை இழந்த நிலையில் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

அதுமட்டுமல்லாமல் 11 பாரிய குளங்கள் உடைப்பெடுத்துள்ளதுடன், 20 குளங்கள் உடைப்பெடுக்கக்கூடிய ஆபத்தான நிலையில் உள்ளன.

பாவற்குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் பாவற்குளம் யுனிற் 1, யுனிற் 02 கந்தசாமி நகர், கங்காகுளம், சூடு வெந்த பிலவு, வாரிக்குட்டியூர் போன்ற 6 கிராமங்களுக்கு அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கள்ளிக்குளம், ஆச்சிபுரம், ஆசிகுளம், மடுக்கந்தை, தேக்கற்தோட்டம், தோணிக்கல், மூன்று முறிப்பு, தாலிக்குளம், தவசிகுளம், நாகர் இலுப்பைக்குளம் போன்ற கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள், விளக்குவைத்தகுளம், மகிழங்குளம், புதியவேலர் சின்னக்குளம், சமளங்குளம் போன்ற இடங்களில் நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டு தங்க வைக்கப்பட்ட தற்போது வீடுகளுக்கு திரும்பியுள்ள நிலையில் அவர்களில் வாழ்வாதாரத்திற்காக எந்த உதவியும் வடமாகாண சபையால் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற வடமாகாண சபை அமர்வில் ஆளும் கட்சியின் வவுனியா மாவட்டத்தை பிரதிபலிக்கும் மாகாண சபை உறுப்பினர்களால் இக்குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | SATURDAY |
|---|---|
| Am 05.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00 | MORNING SONG |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | ஆரோகனம் |
| Am 09.30 | MY STYL |
| Am 09.55 | காலை செய்தி |
| Am 10.00 | ஆரோக்கியமான வாழ்வு |
| Am 11.00 | மக்கள் முகம் |
| PM 11.30 | I T .COM |
| PM 12.00 | காதல் கீதங்கள் |
| PM 12.30 | சிரிக்க சிரிக்க |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00 | அதிர்வுகள் |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தெரிந்தல் சொல்லுங்கள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | இதய ஊஞ்சல் |
| PM 09.00 | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1117 | திகதி 11.12.2014

வெற்றி எண்கள் | ஆங்கில எழுத்து

**16 17 26 50 V**

ஜக்பொட் பரிசு ரூ. 4,69,68,200/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 4,69,68,200/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 50,000/= | ரூ. 7,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 259 | 1,000/= | ரூ. 2,59,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 474 | 1,000/= | ரூ. 4,74,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12504 | 60/= | ரூ. 7,50,240/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6510 | 40/= | ரூ. 2,60,400/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 163090 | 20/= | ரூ. 32,61,800/= |
| ஆங்கில எழுத்து | 23595 | 20/= | ரூ. 4,71,900/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 71,77,340/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா 47,287,260/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.12.15 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3916)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### வாடகைக்கு வீடுகள்/கட்டடங்கள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களிற்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய 155 சதுர அடிகளுக்கு மேற்ப்பட்ட பெரிய, நடுத்தர வீடுகள்/கட்டடங்கள் பல்லைக்கழகத்தை அண்மித்த பகுதிகளில் வாடகைக்கு தேவை.

வீட்டை/கட்டடத்தை வாடகைக்கு தர விரும்புவோர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம் அவர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பபடிவங்களை 31.12.2014 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர **சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் தனித்தனியாக கடித உறையின் இடது மேல் மூலையில் 'மாணவர்களின் விடுதிக்கான வீடு/கட்டடம்' என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்

(C/3929)



## தொலைக்காட்சித் துறையில் சாதிக்க வேண்டும் என கனவு காணும் திறமையுள்ள உங்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்

DDTV யில் நீங்கள்

- செய்தி வாசிப்பாளராக ஆசைப்படுகிறீர்களா?
- நிகழ்ச்சித் தொகுப்பாளராக ஜொலிக்கவேண்டுமா?
- படத்தொகுப்புத் துறையில் கைதேர்ந்தவரா (Editor ? (Adobe Premier CC, After Effect, 3 D Max/ Maya/ Cinema 4D)
- சிறந்த படப்பிடிப்பாளரா (Camera Man) ?
- ஒப்பனைத்துறையில் முன் அனுபவமும் திறமையுமுள்ளவரா?
- சந்தைப்படுத்தல் துறையில் முன் அனுபவமும் வல்லமையும் மிக்கவரா?
- அலுவலகப் பணிகளில் ஆர்வம் மிக்கவரா? (தகைமைகள் க.பொ.த சாதாரணதர சித்தி மற்றும் கணனிசார் அறிவு)

உங்கள் சுயவிபரக்கோவை, அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் தகைமைச் சான்றிதழ்களுடன் எம்மைச் சந்தியுங்கள்

**காலம் :** இன்று சனிக்கிழமை, முற்பகல் 10.00 மணி
**இடம்:** இல.50/57, 3 ஆம் மாடி, யாழ். மாநகரசபை கட்டடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(ஐ)

# அராலி - வேலணை கடற்பாதையை புனரமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்

## யாழ்.கூட்டுறவு சம்மேளனங்களின் தலைவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தீவகத்தினையும் - வலிகாமத்தையும் இணைக்கும் அராலி - வேலணை கடற்பாதை புனரமைப்பு குறித்து கடந்த 5 வருடங்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

2015 ஆம் ஆண்டிலாவது இதனை வீதி அபிவிருத்தி அதிகார சபையூடாக புனரமைத்து தருவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வரவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட கூட்டுறவு சம்மேளனங்களின் தலைவர் ச.செல்வரத்தினம் கேட்டுள்ளார். அராலி - வேலணை கடற்பாதை புனரமைப்பு குறித்து தலைவர் ச.செல்வரத்தினம் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி வீதி புனரமைப்பு குறித்து கடந்த 5 வருடகாலமாக நாம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம் இதுவரை எமது கோரிக்கை நிறைவேறவில்லை.

ஜப்பான் அரசு மேற்படி திட்டத்தை பார்வையிட்டு மதிப்பீடு தயாரித்துள்ளதாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர், கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு தெளிவாக விளக்கியிருந்தார்.

எனவே 2015 இல் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் அராலி - வேலணை கடற்பாதையை புனரமைத்து தருமாறு அமைச்சரிடம் விசேட கோரிக்கை விடுத்துள்ளார் சம்மேளனம் தலைவர்.

செயலாளர் திருமதி சதீஷன் மஞ்சுளாதேவி, தவிசாளர் சி.சிவராசா மற்றும் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சிவகுரு பாலகிருஸ்ணன் மற்றும் த.நடனேந்திரன் ஆகியோரும் கடந்த காலங்களில் இது விடயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வந்தமை தெரிந்ததே.

(92)

# பத்திரிகையாளர் சங்கத்தின் நிர்வாகக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் நிர்வாக கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும்.

சகல நிர்வாகிகளையும் இல.23, சிவன் பண்ணை வீதியில் உள்ள அலுவலகத்திற்கு வருகை தருமாறு வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி இளையதம்பி சற்குருநாதன் கேட்டுள்ளார்.

அன்றைய தினம் வடமாகாண ஊடகவியலாளர் எதிர்நோக்கும் பிரச்சினை, அவர்களுக்கான உபகரணம் வழங்கல் தொடர்பாக முக்கிய தீர்மானம் எடுக்கப்பட விருப்பதால் சகலரையும் தவறாது சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை சங்கத்தின் தலைவர் செல்லப்பா கதிர்காமதம்பி தெரிவிக்கையில், தனது உடற் சுகயீனம் காரணமாக உடன் சமுகமளிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளதாகவும் அங்கத்தவர்கள் யாவரும் கூட்டத்திற்கு சமுகமளித்து சங்கத்தினை வலுவூட்டி செயற்படுத்துமாறும் கேட்டுள்ளார்.

(92)

# ஆறுகால்மடம் தில்லை வயல் வீதி கல்லிடப்பட்டு புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் பழம் றோட் 4 ஆம் ஒழுங்கை தில்லைவயல் வீதி கல்லிடப்பட்டு புனரமைக்கப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை முன்னாள் துணை முதல்வர் துரைராசா இளங்கோ (றீகன்) தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இந்த வீதி திருத்தப்பணிகளுக்கு சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் நேற்று முதல் இந்த வீதி புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக தெரிவித்தார்.

சேறும் சகதியுமாக காணப்பட்ட இவ் வீதியினூடாக அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே பயணம் செய்ய வேண்டியிருந்தது. இந்த நிலை குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதனை அடுத்து இந்த வீதிக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டு புனரமைப்புப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# பொய்ச்சங்கை ஊதினாலும் ஊரில நாலு நல்ல காரியங்கள் நடக்கிறதை விரும்பினால் சரிதான்...

வடபுலத்தான் எழுதுவது...

நீண்ட இழுபறிகளுக்குப் பிறகு, இரணைமடுக்குளத்தைப் புனரமைக்கிறதுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி சம்மதித்திருக்கிறது.

இது மகிழ்ச்சியளிக்கிற ஒரு சங்கதியே.

ஆனால், இதுவரைகாலமும் தேவையில்லாத ஒரு இழுபறிக்கு ஏன் ஆசிய அபிவிருத்தி வங்கி இடமளித்தது?

இப்பொழுது எந்த அடிப்படையில் இணக்கத்துக்கு அது வந்தது?

அப்பொழுதும் இப்பொழுதும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தனா தான் அரசாங்கத்தரப்பின் சார்பில் உடன்பாடு காண்பதற்கு ஒத்துழைத்திருக்கிறார்.

இந்த உடன்பாட்டின் பின்னணியில் வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் முயற்சிகளும் இருக்கிறதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆர் குத்தினாலும் அரிசியானால் சரிதான்.

ஆனால், தான் குத்தித்தான் அரிசியாகி இருக்கிறமாதிரி, இந்த இரணைமடுப் புனரமைப்புத் திட்டத்தைப் பற்றி சங்கூதிக் கொண்டு திரியிறார் பொய் ஐங்கரநேசன்.

இதைப்பற்றி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலை ஒன்று முதலமைச்சரிடம் கேட்டிருக்கிறார்.

அதுக்கு முதலமைச்சர் சொன்னாராம், "ஐங்கரநேசனைப் பற்றித் தெரிஞ்சுதானே ஊர் உலகமெல்லாம் பொய் ஐங்கரநேசன் என்டு சொல்லுது. அவர் அப்பிடித்தான் செய்வார். அவர் மட்டுமென்ன, எங்கட ஆட்கள் (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள்) எல்லாரும் இப்பிடித்தான். கூசாமல் பொய் பேசுவாங்கள். எல்லா வெற்றிக்கும் தாங்கள்தான் பொறுப்பு என்று சொல்லுவாங்கள். ஏதோ இருக்குமட்டும் சமாளித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்" என்று.

எப்படியோ விரைவில் இரணைமடுக்குளம் புனரமைக்கப்படப் போகிறது.

இதனால் விவ்சாயிகள் மட்டுமல்ல. கிளிநொச்சிப் பகுதிகளில் இருக்கிற எல்லோருக்கும்தான் நன்மைகள் கிட்டும்.

குளப்புனரமைப்பு நடக்காமல் இருந்திருந்தால், மழை பெய்யப் பெய்ய நெஞ்சிலே கையை வைத்துக்கொண்டு, கடவுளை நேர்ந்து கொண்டுதான் பெரும்பாலான சனங்கள் இருந்தனர்.

காரணம், வெள்ளம் கூடி, தண்ணீர் மட்டம் உயர்ந்தால், எந்த நேரத்திலும் அணைக்கட்டு கைவிடலாம் என்ற பயம் இருந்தது.

இப்பொழுது அந்தப் பயம் நீங்கியுள்ளது.

அதோடு நீர் மட்டத்தை உயர்த்தி, மேலதிக நீரைச் சேமித்துக் காண்பித்து விட்டு அதன் பிறகு யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் விநியோகத்தைப் பற்றிப் பேசலாம் என்று கருதுகிறது ஆசிய அபிவிருத்தி வங்கி.

இதைத்தான் நாசூக்காக முதலமைச்சரும் சொல்லியிருக்கிறார்.

அதனால்தான் தினேஸ் குணவர்த்தனாவும் ஒப்புதலை அளித்திருக்கிறார்.

இதெல்லாம் பிறகுதான்.

இப்பொழுது குளம் புனரமைக்கப்படட்டும்.

வடக்கின் முக்கியமான நீர்த்தேக்கம் அது.

மிகப்பெரிய அணைக்கட்டு.

இதைக் காப்பாற்ற வேண்டியது ஒவ்வொருவருடைய பொறுப்புமாகும். அப்பிடியே விவசாயிகளை ஆறுதல் படுத்தி, அவர்களுடைய வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள குளத்தைப் பாதுகாக்க வேண்டியதும் அனைவருக்குமான கடமையாகும்.

இப்பொழுது இந்தக் கடமையை ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் செய்து முடித்திருக்கிறார்கள்.

ஆனால், இதை ஐங்கரநேசன் போன்றவர்கள் தங்கள் தலையில் தூக்கி வைத்து நாசமாக்கப் போகிறார்களோ என்றுதான் அச்சமாக இருக்கிறது.

முதலமைச்சருக்கு இந்தத் திட்டம் கைவிடப்படாது, எப்படியாவது நிறைவேற்றப்பட வேண்டும் என்ற விருப்பம் இருந்தது.

இதைப்போல இந்தக் குளத்திட்டம் எப்படியாவது நடக்க வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரும் எவ்வளவோ பாடுபட்டனர்.

எல்லோருடைய முயற்சிக்கும் கைமேல் பலன் கிட்டியிருக்கிறது.

இதன்படி அடுத்த ஆண்டு இரணைமடுக்குளத்தை அண்மித்த பகுதிகள் புத்தெழில் பூத்துப் பொலிந்திருக்கும்.

இரணைமடு பெரிய சமுத்திரமாக அலைமோதும்.

இப்படி நாலு நல்ல காரியங்கள் நடந்தால் தமிழ்ச் சமூகம் நல்ல வளர்ச்சியைப் பெற்று விடும்.

காலம் பிந்தினாலும் ஞானம் பிறந்திருக்கு ஞானத்தங்கமே.... எந்தன் தங்கமே....

நம்பிக்கையுடன் இருக்கும்போது எந்தக் காரியமும் கடினமாகத் தெரிவது இல்லை. - ஜோன்ரேட்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## போராட்டத்தை ஒத்திப்போடுவதானால்...

கிராமங் கிராமமாகச் சென்று மக்களிடம் அபிப்பிராயங் கேட்டு, மார்கழிக் கடைசியில் எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பதை தமிழரசுக் கட்சி அறிவிக்கும் என்று மாவை சேனாதிராஜா அவர்கள் சொல்லியிருக்கிறார் அல்லவா!

கிராமங் கிராமமாக அவர் சென்று மக்களைச் சந்தித்துக் கொண்டிருப்பது, தமிழர்களுக்குத் தன்னாட்சித் தீர்வொன்றைத் தருவதற்குச் சும்மா ஒரு பேச்சுக்காகவேனும் வாக்குறுதியொன்றைத் தரமுடியாத இந்த வேட்பாளர்களில் யாருக்கு ஆதரவளிப்பது என்ற முடிவை எடுப்பதற்காக இருக்குமா?

இருக்காது. இலங்கை ஆட்சியாளர்கள் யாரும் தீர்வைத் தரமாட்டார்கள் என்று தெரிந்துகொண்டு அவர் இரண்டரை மாதங்களுக்கு முன் அறிவித்த தொடர் அகிம்சைப் போராட்டங்களை ஜனவரி 1-இலிருந்து ஆரம்பிக்க மக்களைத் தயார்படுத்துவதற்காகத்தான் கிராமங் கிராமமாகச் சென்றுவருகிறாராக இருக்க வேண்டும்!

யார் ஜனாதிபதியாக வந்தாலும் தமிழரசுக் கட்சி கேட்கும் தீர்வைத் தரப்போவதில்லை என்று தெரிந்தபிறகு ஏன் தேர்தல் முடிவுக்குக் காத்திருக்க வேண்டும். இருவரில் யார் வெற்றி பெற்றாலும் தமிழரசுக்கட்சி கேட்பதைத் தரப்போவதில்லை என்பது தான் தெளிவாகி விட்டதே... பிறகு ஏன் 8-ந் திகதி தேர்தல் முடிவைப் பார்த்திருக்க வேண்டும்?

தமிழரசுக்கட்சித் தலைவர் ஏற்கனவே உறுதியாக அறிவித்தபடி, ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அகிம்சைப் போராட்டங்களை ஆரம்பிப்பதை, 8-ம் திகதிக்குப் பிறகு இந்த வேட்பாளர்கள் எதையோ தருவார்கள் என்று நம்பித் தள்ளிப்போட முடியுமா?

தமிழ்க் கூட்டமைப்பினர் மகிந்தவுடன் பேசித் தீர்வை எடுக்க முடியாது என்பதை ஏற்கனவே அறிவித்துவிட்டனர். மைத்திரியுடன் பேசித் தீர்வை எடுக்கக்கூடிய நம்பிக்கையும் தமிழ்க் கூட்டமைப்பினருக்கு இருப்பதாக அவர்கள் ஒருபோதும் தெரிவிக்கவில்லை.

சந்திரிகா, மகிந்த இருவரது அரசாங்கத்திலும் பத்தாண்டுகளாக அமைச்சராக இருந்தவர்தான் மைத்திரிபால. 2009-ல் முடிவடைந்த போருக்கும் ஆதரவாக இருந்தவர். இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு, தமிழர்களுக்கு எந்தவகையான அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்றெல்லாம் இதுவரையில் வாயே திறக்காதவர்.

தமிழர்களுக்கு எந்தவிதமான மேலதிக அதிகாரங்களும் வழங்கப்படக்கூடாது என்று கூறிவரும் ஜாதிக ஹெல உறுமயவுடனும் மைத்திரிபால சிறிசேன புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையின் அரசியல் யாப்பில் பௌத்தத்தை முன்னுரிமைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும், சுயாட்சி அரசாங்க முறைமையை எதிர்ப்பதாகவும் அந்த உடன்படிக்கையில் சிறிசேன வாக்குறுதி வழங்கியுள்ளார்.

அதனடிப்படையில், தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினைத் தீர்வு எதுவும் குறிப்பிடப்படமாட்டாது என்றும், தேர்தல் முடிந்து நூறு நாட்களில் அமையவிருக்கும் அனைத்துக் கட்சி அரசாங்கம்தான் அதுகுறித்து ஆராயும் என்றும் சிறிசேன தெளிவாகவே கூறியிருக்கிறார்.

இதற்கு மேலாக, அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்னத்தை எதிர்பார்த்துக் காத்திருந்து தேர்தலுக்கு கடைசி ஐந்தாறு நாள் இருக்கையில் தமிழ்மக்களுக்கு ஏதோ திடுக்கிடும் வழிகாட்டலைச் செய்துகிழிக்க முடியும் த.தே.கூட்டமைப்பு?

மாவை சேனாதிராஜா அவர்கள் உறுதிபட அறிவித்த அகிம்சைப் போராட்டத்தை ஒத்திப்போட்டுவிட்டுக் காத்திருப்பதற்கு, இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய எந்த நம்பிக்கையும் கிடைத்திருப்பதாக" அவர் வெளிப்படுத்தவில்லை.

இந்நிலையில், அவர் ஜனவரி 1-ந்திகதி முதல் அகிம்சைப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லையானால், தீர்வு குறித்த எந்த வாக்குறுதியை நம்பி - யாருடைய வாக்குறுதியை நம்பி போராட்டத்தை ஒத்திப்போடுகிறார் என்பதைத் தமிழ் மக்களுக்கு மாவை அறிவிக்க வேண்டும்.

- ஆசிரியர்

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்க முன்னர் ஆதரவு கிடைக்கவில்லை

## கூறுகிறார் சந்திரிக்கா

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க இன்றைக்கு கிடைத்திருக்கும் ஆதரவு அன்றைக்கு எனக்கு கிடைக்கவில்லை என்று தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயகக குமாரதுங்க அவ்வாறு கிடைத்திருந்தால் அதை அன்றே நீக்கியிருப்பேன் என்றும் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்காகவே தனது ஒற்றை கண்ணை தான் இழந்ததாகவும் சந்திரிக்கா இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன் இன்றைக்கு ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க முன்வந்துள்ளதாக தெரிவித்த அவர், அன்று அவ்வாறு யாரும் ஒத்துழைக்கவில்லை என்றார். அவ்வாறு ஒரு இணக்கமான சூழல் வாய்த்திருந்தால் நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்திருப்பேன் என்று கூறிய சந்திரிக்கா பண்டாரநாயக்கா தான் நிறைவேற்று அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யவில்லை என்றும் குறிப்பிட்டார். தனக்குப் பின்னர் நிறைவேற்று அதிகாரத்தால் ஆபத்து நேரும் என்று அறிந்திருந்ததாகவும் அவர் கூறினார்.

தான் அன்று அவ்வாறு நினைத்தது இன்று நடந்துகொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டிய சந்திரிக்கா பண்டார நாயக்கா இன்றைய சூழலில் அனைவரும் ஒன்றிணைந்து இதனை செய்து முடிக்க வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# அரசியலில் பணம் சம்பாதிக்கும் எண்ணம் கிடையாது என்கிறார் ரணில்

அரசியலில் பணம் சம்பாதிக்க வேண்டிய அவசியம்" தனக்கு கிடையாது என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கிருலப்பனையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்று நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி மைத்திரிபால சிறிசேனவிடம் நாட்டை ஒப்படைப்பதன் மூலம் மைத்திரிபாலவோ, ரணில் விக்ரமசிங்கவோ, சம்பிக்க ரணவக்கவோ வெற்றியீட்டப் போவதில்லை.

உண்மையான வெற்றி மக்களுக்கே கிடைக்கும்.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஆட்சியினால் மக்கள் கடுமையான பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மைத்திரிபால வெற்றியீட்டிய தன் பின்னர் பெப்ரவரி மாதமளவில் அரசாங்க மற்றும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்படும்.

சம்பள உயர்விற்கான பொறிமுறைமை உருவாக்கப்படும் வரையில் இடைக்கால கொடுப்பனவாக 5000 ரூபா வழங்கப்படும்.

எனக்கு பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது.

அவ்வாறு பணம் சம்பாதிக்க தேவையென்றால் நான் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பேன் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

# அமைச்சுக்களின் செயலர்களுக்கு மனித உரிமை தொடர்பில் விளக்கம்

மனித உரிமை ஆணையாளர், குறைகேள் அதிகாரி மற்றும் நாடாளுமன்ற முறைப்பாட்டு தெரிவுக்குழுவின் முன்மொழிவுகள் கட்டாயம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்கவின் கையெழுத்துடனான சுற்றுநிருபம் கடந்த வாரம் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது என இலங்கை மனித உரிமை ஆணையாளர் கலாநிதி பிரதிப வீரதுங்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மனித உரிமை தொடர்பான முன்மொழிவுகள் வைக்கப்பட்டிருந்தால் இந்த சுற்றுநிருபத்திற்கமைவாக கட்டாயம் அவை நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

இது அனைத்து அமைச்சுக்களுக்கும் பொதுவானது. அவ்வாறு நடைமுறைப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் அதற்கெதிராக மீண்டும் மனித உரிமை ஆணைக்குழு முன் செல்ல முடியும்.

இது தொடர்பில் செயலாளர்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளனர். நடைமுறைப்படுத்தப்படாவிடின் சட்டத்தின் உதவியை நாடமுடியும் பொலிஸ சித்திரவதை தற்போது படிப்படியாக குறைந்துள்ளது. அதற்கு பொலிஸார் தெளிவுபடுத்தப்பட்டமையே காரணம். பொலிஸ் சித்திரவதை தொடர்பில் சட்டமூலம் ஒன்றுள்ளது. அதற்குரிய சட்டமூலத்தில் இலங்கை கையெழுத்திட்டுள்ள நிலையில் 90 வீத பிரச்சினை தீர்ந்துள்ளது. இதனாலும் பொலிஸ் சித்திரவதை குறைந்துள்ளது.

## அரசுடன் இணையமாட்டேன் அமரதுங்க எம்.பி.தெரிவிப்பு

அரசாங்கத்தில் தான் இணைந்து கொள்ளப் போவதாக வெளியாகும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என எதிர்க்கட்சியின் பிரதம கொரடா, நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சில தொலைக்காட்சிகளில் தான் ஐக்கிய மக்கள சுதந்திர முன்னணியில் இணைந்து கொள்ளப் போவதாக செய்தி வெளியிடப்படுவதாகவும் அந்த தொலைக்காட்சி தன்னிடம் எதுவும் கேட்காமல் அவ்வாறு செய்தி வெளியிடுவது கவலையளிப்பதாகவும் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனும் ஐ.ம.சு.மு. அமைச்சர்கள் சிலருடனும் நட்பு உள்ள போதிலும ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலக விருப்பம் இல்லை என அவர் கூறினார். அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவோ பணம் தரவோ தன்னிடம் யாரும் கதைக்க வில்லை என ஜோன் அமரதுங்க குறிப்பிட்டார்.

1956 ஆம் ஆண்டு ஐ.தே.க.வில் இணைந்தது முதல் இன்று வரை சேவை புரிவதாகவும் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

# தேசிய கல்வி விஞ்ஞானபீட மாணவருக்கு மாதாந்த கொடுப்பனவு அதிகரிப்பு

நாடு முழுவதிலுமுள்ள 18 தேசிய கல்வி விஞ்ஞான பீடங்களிலும் கல்வி பயிலும் மாணவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு 4000 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

தேசிய கல்வி விஞ்ஞானபீட வரலாற்றிலேயே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் ஜனவரி மாதம் முதல் இந்தக் கொடுப்பனவு அதிகரிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

திவிநெகும வாழ்வாதார திட்டத்தின் கீழ் தேசிய கல்வி விஞ்ஞான பீடங்களுக்கு மாதிரி விவசாய பண்ணைகளை ஆரம்பிப்பதற்காக உழவு இயந்திரங்களை கையளிக்கும் வைபவம் கம்பஹா தேசிய விஞ்ஞான கல்வி பீடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்படி தகவலை தெரிவித்தார்.

அமைச்சின் மேலதிக செயலாளர் சாந்த பண்டார, தேசிய கல்வி விஞ்ஞான பீடங்களின் ஆணை யாளர் எல்.எச்.டி தர்மசேன உட்பட பிரமுகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# மைத்திரிபாலவால் அறநெறி சார்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியுமா?

**கே. ரட்னாயக்க கட்டுரையிலிருந்து**

> எதிரணியின் கூட்டு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குறுதிகள் அனைத்தும் போலியானவை. சந்திரிகா குமாரதுங்க மற்றும் ராஜபக்ச அரசாங்கங்களின் கீழ் கிட்டத்தட்ட பத்தாண்டுகளாக சிறிசேன அமைச்சராகப் பணியாற்றியுள்ளார். இவர் இந்த அரசாங்கங்களால் தொழிலாளர்களின் சமூக உரிமைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட தாக்குதல்களுக்கும் குற்றங்களுக்கும் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான வக்கிரமான போருக்கு ஆதரவாகச் செயற்பட்டுள்ளார்..

மைத்திரிபால சிறிசேன நாட்டில் நிலவும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் ஜனநாயக உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவருவார் என்ற நம்பிக்கையை வாக்களர்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டே எதிரணிகளின் கூட்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

"ஜனநாயகம் மற்றும் மக்களுடன் நட்பைப் பாராட்டும் ஆட்சியை ஏற்படுத்துவதற்கான மக்களின் பொதுவான நிகழ்ச்சி நிரல்" என்பதை அடிப்படையாகக் கொண்ட எதிரணியானது, அனைத்துலக நாணய நிதியத்தால் இனங்காணப்பட்ட மகிந்த ராஜபக்சவின் பொருளாதார அளவீடுகளையே தொடர்ந்தும் வெளிப்படுத்தும். அதே வேளையில், எதிரணியானது அமெரிக்காவுடனும் சீனாவுக்கு எதிரான அமெரிக்காவின் ஆசியாவுக்கான செயற்பாடுகளுடனும் இணைந்து பணியாற்றும்.

வலதுசாரிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் 2010ல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்சவுக்கு எதிராகப் போட்டியிட்ட எதிரணியின் பொதுவேட்பாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி உட்பட பல கட்சிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் உதவியுடன் சந்திரிகா குமாரதுங்கவால் முன்னெடுக்கப்பட்ட அரசியற் சதித்திட்டத்தின் விளைவாக இதுவரை காலமும் அரசில் சுகாதார அமைச்சராகச் செயற்பட்ட சிறிசேன நவம்பர் 21 அன்று சில அமைச்சர்களுடனும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் அரசாங்கத்தை விட்டு வெளியேறி ராஜபக்சவுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்தார்.

ராஜபக்சவின் சீனாவுடனான நெருக்கமான உறவை எதிர்த்து நிற்கும் அமெரிக்காவுக்கு இலங்கையின் அரசியலில் இவ்வாறான ஒரு மாற்றம் இடம்பெறவுள்ளது தெரியும். இலங்கையைப் புதியதோர் அதிபர் ஆட்சிசெய்ய வேண்டும் என்பதை அமெரிக்காவும் விரும்புவதால் இந்த அரசியற் சதித்திட்டத்தை ஏற்றுக்கொண்டது.

இலங்கையில் வாழும் தொழிலாளர்கள் மற்றும் ஏழை மக்கள் மத்தியில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஏற்பட்டுள்ள கோபத்தைப் பயன்படுத்தி, "நாட்டில் சீர்குலைந்துள்ள சட்ட ஆட்சி", "ஜனநாயக உரிமை மீறல்கள்", "முன்னெப்போதும் இல்லாதவாறு தற்போது விரிவடைந்துள்ள சமூக ஏற்றத்தாழ்வுகள்", "பல்வேறு இன மற்றும் மத சமூகங்களுக்கிடையில் நிலவும் பேதங்கள் மற்றும் நாட்டில் அதிகரித்துள்ள அமைதியின்மை மற்றும் அவநம்பிக்கை" போன்ற பல்வேறு விடயங்களை முடிவுக்குக் கொண்டுவருவதே தமது நோக்கமாகும் என எதிரணி தனது புரிந்துணர்வு உடன்படிக்கையில் பிரகடனப்படுத்தியுள்ளது.

பரந்தளவு அதிகாரங்களை வழங்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதுடன், அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரத்தையும் ராஜபக்ச மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாவதற்கு அனுமதிக்கும் 18வது திருத்தச் சட்டம் ஒழிக்கப்படும் என எதிரணி வாக்குறுதி வழங்கியுள்ளது.

இப்புரிந்துணர்வு உடன்படிக்கையில் மேலும் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக பொது மற்றும் தனியார் துறைப் பணியாளர்களின் கொடுப்பனவுகளை அதிகரித்தல், அனைத்துப் பொருளாதாரத் துறைகளையும் பலப்படுத்துதல், ஏழை மக்களுக்கான குறிப்பாக பெண்கள், சிறார்கள், வயது முதிர்ந்தோர், ஓய்வுபெற்றோர், மாற்றுவலுவுள்ளோர் போன்றவர்களுக்கான வினைத்திறனான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்கி அதன்மூலம் நலன்புரி

> **ராஜபக்ச அரசாங்கத்தை விட தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக மற்றும் சமூக உரிமைகள் மீது எதிரணியே மிகவும் மோசமான ஈவிரக்கமற்ற தாக்குதல்களை மேற்கொள்ளும்.**

நாடொன்றை மீளக்கட்டியெழுப்புதல் போன்ற பல்வேறு வாக்குறுதிகள் எதிரணியால் கூட்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

புதிய அரசாங்கமானது நாகரீகமான அறநெறி சார்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்பு வதுடன், எப்போதுமில்லாதவாறு கடன் சுமையால் தத்தளிக்கும் இந்த நாட்டின் அரசியல் கலாசாரத்தை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என எதிரணியின் கூட்டு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வாக்குறுதிகள் அனைத்தும் போலியானவை. சந்திரிகா குமாரதுங்க மற்றும் ராஜபக்ச அரசாங்கங்களின் கீழ் கிட்டத்தட்ட பத்தாண்டுகளாக சிறிசேன அமைச்சராகப் பணியாற்றியுள்ளார். இவர் இந்த அரசாங்கங்களால் தொழிலாளர்களின் சமூக உரிமைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட தாக்குதல்களுக்கும் குற்றங்களுக்கும் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான வக்கிரமான போருக்கு ஆதரவாக செயற்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி தொழிலாளர் சமூகத்திற்கு எதிராக பல்வேறு மீறல்களைப் புரிந்துள்ளது. ஐ.தே.க 1970களின் பிற்பகுதியில் சந்தை-சார்புக் கட்டமைப்பு நிகழ்ச்சி நிரலை அறிமுகப்படுத்தியதுடன், தமிழர் இனவாதத்திற்கு எதிராகவும் தொழிலாளர் வர்க்கத்தைப் பிரிப்பதற்குமான உள்நாட்டுப் போரை ஆரம்பித்தது. ராஜபக்ச அரசாங்கத்தை விட தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக மற்றும் சமூக உரிமைகள் மீது எதிரணியே மிகவும் மோசமான ஈவிரக்கமற்ற தாக்குதல்களை மேற்கொள்ளும்.

"நலன்புரி அரசை மீளவும் கட்டியெழுப்புவேன்" என சிறிசேன வாக்குறுதி அளிக்கிறார். ஆனால் இவர் தனது பொருளாதாரக் கோட்பாடுகள் தொடர்பாக எவ்வித கருத்தையும் முன்வைக்கவில்லை. "நாங்கள் அரசாங்கத்தை அமைக்கும் போது திறந்த பொருளாதாரக் கோட்பாட்டைப் பின்பற்றுவோம்' என நவம்பர் 29 அன்று ஐ.தே.க தலைமைச் செயலகத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் சிறிசேன உறுதியளித்தார்.

சிறிசேனவின் இந்த அறிவிப்பானது இவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றால் இலங்கை வாழ் தொழிலாளர் வர்க்கம் மற்றும் ஏழை மக்களின் வாழ்வாதாரம் மேலும் மோசமாகும் என்பதற்கான உத்தரவாதமாகவே இது நோக்கப்படுகிறது. நாட்டின் நலிவடைந்த பொருளாதாரத்தை அனைத்துலகப் பொருளாதாரம் மேலும் நலிவடையச் செய்வதற்கான நடவடிக்கைகளை இலங்கையின் ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இவ்வாறான நிகழ்ச்சி நிரல் பின்பற்றப்படுகிறது.

வெளியுறவுக் கோட்பாடு தொடர்பாக எதிரணியின் புரிந்துணர்வு உடன்படிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

2006ல் புலிகளுக்கு எதிராக ராஜபக்சவால் பாரியளவில் முன்னெடுக்கப்பட்ட யுத்தத்திற்கு அமெரிக்கா தனது ஆதரவை வழங்கினாலும் கூட, போரின் போது இலங்கை அரசாங்கத்தால் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்கு பொறுப்பளிக்க வேண்டும் என அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கை மீது அழுத்தம் கொடுத்து வருகிறது. இதன்மூலம் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் இடைவெளியை ஏற்படுத்த அமெரிக்கா விரும்புகிறது.

சீனாவுடன் இலங்கை நெருங்கிய நட்பைப் பேணுவதானது பொருளாதாரத் தடை ஏற்படவும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கை தனது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான் தடை விதிக்கப்படலாம் என எதிரணிக்குத் தாவிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அச்சப்படுகின்றனர்.

கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைத் தனது அரசாங்கம் நிறைவேற்றும் என சிறிசேன பத்திரிகையாளர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளார். போர்க் குற்றங்கள் பற்றிய அனைத்துலக விமர்சனங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே ராஜபக்ச கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கினார்.

தான் இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவேன் எனக் கூறியதன் மூலம், நாட்டிலுள்ள தமிழ்த் தலைவர்களுக்கான கோரிக்கை போன்றவற்றுடன் கூடிய அமெரிக்காவை நோக்கிய வெளியுறவுக் கோட்பாட்டையே சிறிசேன உருவாக்க விரும்புகிறார் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளையில், அண்மையில் ராஜபக்சவின் கூட்டணியிலிருந்து விலகிக் கொண்ட, சிங்கள-பௌத்த தீவிரவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுடன் சிறிசேன பிறிதொரு புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளார். இலங்கையின் அரசியல் யாப்பில் பௌத்தத்தை முன்னுரிமைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும், சுயாட்சி அரசாங்க முறைமையை எதிர்ப்பதாகவும் சிறிசேன வாக்குறுதி வழங்கியுள்ளார். அதாவது தமிழ்த் தலைவர்களுடன் எவ்வித விட்டுக்கொடுப்புக்களையும் வழங்குவதில் சிறிசேன ஆர்வங்கொள்ளவில்லை என்பதையே இது சுட்டிநிற்கிறது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது?

# நாடகமாடுகிறது முஸ்லிம் காங்கிரஸ்

## விமர்சிக்கிறார் கிரியல்ல எம்.பி.



ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என முடிவெடுப்பது போல நாடகமாடி வரும் முஸ்லிம் காங்கிரஸ் பொது வேட்பாளரை ஆதரிக்க அரசைவிட்டு வெளியே வந்தாலும் ஒன்றுதான் வராவிட்டாலும் ஒன்று தான் 'ஆவத் எக்கை நாவத் ஏக்கை' என ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஹலால் விடயம் தொடக்கம் அளுத்கம பேருவளை கலவரம் இடம்பெற்ற போது கூட அரசுக்கு வால் பிடித்துக்கொண்டு அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருந்த முஸ்லிம் காங்கிரஸ் இன்று முழு நாடே பொது வேட்பாளர் மைத்திரியுடன் அணிதிரண்டுள்ள நிலையிலும் அக்கட்சியின் உயர்பீடத்தை கூட்டி நாடகம் நடிப்பது ஏன் என்பதை முஸ்லிம்கள் நன்கு விளங்கிவைத்துள்ளனர்.

அது தவிர சிங்களவர்கள் நாங்கள் முஸ்லிம்களுக்காக நாடாளுமன்றத்தில் குரல்கொடுக்கும் போது முக்காடு போட்டுக் கொண்டு ஓடி ஒளிந்துகொண்டவர்கள் தான் இந்த முஸ்லிம் தலைமைகள் என்பதையும் முஸ்லிம்கள் நன்கு புரிந்து வைத்துள்ளனர்.

மகிந்த வெற்றிபெற்றால் நாம் எங்கே செல்வது? மைத்திரி வெல்வார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? என கேட்கும் இவர்கள் ஆயிரக்கணக்கான உயிர்களை உடைமைகளை இழந்தும் இன்றும் கொள்கையுடன் வாழும் வடக்கு தமிழர்களை பார்த்தாவது பாடம்படிக்கவேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் யாரை ஆதரித்தாலும் யாருக்காக தேர்தல் பிரசாரம் செய்தாலும் முஸ்லிம்கள் மகிந்த ராஜபக்ஷவையும் அவரது அரசாங்கத்தையும் ஒழித்துக்கட்ட முடிவெடுத்து விட்டார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

என்று முதலாவது பள்ளிவாசல் உடைக்கப்பட்டதோ என்று ஹலாலுக்கு எதிராக பிரச்சினை வந்ததோ ,என்று முஸ்லிம்கள் அணியும் உடைக்கு பிரச்சினை வந்ததோ அன்று இவர்கள் அரசை விட்டு வெளியேறியிருக்க வேண்டும் அன்று இவர்கள் ஜனாதிபதி வீட்டில் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள் ,அன்று இவர்கள் அரசை விட்டு வெளியேறி இருந்தால் முஸ்லிம்கள் இவர்களை ஒருவேளை பாராட்டியிருப்பார்கள் ஆனால் இப்போது உள்ள சூழ்நிலையில் சமூகத்துக்காக துணிந்து முடிவெடுக்க முடியாத இவர்கள் நாளைய தினமே அரசை விட்டு வெளியேறினால் கூட முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை முஸ்லிம் காங்கிரஸ் நான்கு விளங்கிக்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கம்மன் பிலவின் செயற்பாடு மக்களே தீர்மானிப்பர்

## என்கிறார் சம்பிக்க



உதய கம்மன்பிலவின் நடவடிக்கைகள் குறித்து மக்கள் தீர்மானிப்பார்கள் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கம்மன்பில எடுத்த தீர்மானம் தம்மையோ கட்சியையோ பாதிக்காது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் ஓர் அரசியல்வாதி என்ற காரணத்தினால் அவரது அரசியல் வாழ்க்கைக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன் என ரணவக்க தெரிவித்துள்ளார்.

கம்மன்பில போவதற்கு தீர்மானிதத்துள்ளார் எனவும் அது பற்றி தமக்குக் கவலையில்லை எனவும அவர் குறிப்பிட்டுள்ளார்.

உதய கம்மன்பில சிறந்த ஓர் அரசியல்வாதி என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும் அவர் இப்போது எடுத்துள்ள தீர்மானம் குறித்து மக்களே நிர்ணயிப்பார்கள் என சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# பிக்குகளின் ஆதரவைத்திரட்ட வாகன இறக்குமதிக்கு அனுமதி

## தேசிய சங்க சம்மேளனம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பௌத்த பிக்குகளின் ஆதரவினை திரட்டும் நோக்கில் அரசாங்கம், வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளதாக தேசிய சங்க சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

தேசிய சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் பாயின்கல ஆனந்த சாகர தேரர், இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

மிதவாத கொள்கைகளை பின்பற்றி வரும் 70 பௌத்த பிக்குகளுக்கு அரசாங்கம் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்கியுள்ளது.

60 முதல் 80 இலட்சம் ரூபா பெறுமதியான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இந்த வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பௌத்த பிக்குகளின் தேசிய ரீதியான கொள்கைகளை சிறைப்படுத்தும் நோக்கில் இவ்வாறு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த பத்தாண்டு காலப் பகுதியில் குறிப்பிடத்தக்களவு பௌத்த பிக்குகளுக்கு இவ்வாறு வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட பௌத்த பிக்குகளின் விபரங்கள் அம்பலப்படுத்தப் படும்.

அரசியல்வாதிகளினால் வழங்கப்பட்டு வரும் சலுகைகள், வரப்பிரசாதங்கள் போன்றவற்றுக்கு விலை போகாது முக்கிய விடயங்களில் பௌத்த பிக்குகள் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டுமென தேசிய சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் பாயின்கல ஆனந்த சாகர தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கண்காணிப்பாளர்கள் அழைப்பு பாராட்டுத் தெரிவிக்கும் பிரிட்டன்



(கொழும்பு)

கொமன்வெல்த், சார்க் நாடுகளின் கண்காணிப்பாளர்கள், ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்க அழைத்ததனை வரவேற்பதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் குறித்து நேற்றுமுன்தினம மாலை பிரித்தானிய நாடாளுமன்றத்தின் பிரபுக்கள் சபையில் குறுகிய நேர விவாதம் ஒன்று இடம்பெற்றது.

இந்த விவாதத்துக்குப் பதிலளித்து உரையாற்றிய பிரித்தானிய வர்த்தக அமைச்சர் லிவிங்ஸ்டன் பிரபு,

வர்த்தகம் பிரித்தானியாவின் செழிப்புக்கு மட்டுமன்றி இலங்கையின் செழிப்புக்கும் முக்கியமானது.

எனினும், சுதந்திரமான வர்த்தகத்துக்குச் செல்வதற்கு முன்பாக, எம்முன் மனித உரிமைகள் பற்றிய கடப்பாடுகளும் உள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாதம் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு பிரித்தானியா ஆதரவு அளித்திருந்தது.

இந்த தீர்மானம், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் நிலையில் முன்னேற்றத்தை எட்டும்படி இலங்கையைக் கோரியது.

'போரின் போது இருதரப்பினாலும் இழைக்கப்பட்ட அனைத்துலக சட்ட மீறல்கள் குறித்து விசாரணை செய்யுமாறு, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்துக்கும் இந்த தீர்மானம் ஆணை வழங்கியுள்ளது.

நாம் இந்த விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும்படியும், விசாரணையில் சாட்சியமளிப்போரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் படியும், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வு குறித்து தமது சொந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் படியும் இலங்கையை தொடர்ந்து கேட்டு வருகிறோம்.

அடுத்தமாதம் இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நியாயமான முறையில் நடப்பதை உறுதி செய்வதற்கு, அனைத்துலக கண்காணிபபாளர்களை அழைக்கும்படி நாம் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.


இலங்கை தேர்தலகள் ஆணையம், கொமன்வெல்த் மற்றும் சார்க் கண்காணிப்பாளர்களை அழைத்திருப்பதை வரவேற்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதிக்கு சேறுபூசும் இணையங்கள் மீது நடவடிக்கை

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சேறு பூசும் பல்வேறு இணையத்தளங்கள் கடந்த மாதத்தினுள் சர்வதேச, உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுடன் இலங்கையிலும். வெளிநாடுகளிலும் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதென என அமைச்சர் கெஹலிய தெரிவித்துள்ளார்.

குறித்த தளங்கள் பிழையான செய்திகளை மக்களுக்கு கொண்டு செல்கின்றன. அத்துடன் ஜனாதிபதிக்கு அபகீர்த்தி ஏற்படுத்துதல், அவரது தேர்தல் பிரசாரங்களுக்கு மாற்றமாக தவறான பொய்ச் செய்திகளை பரப்பும் இணையத்தளங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்படாத இணையத்தளங்கள் மற்றும் பிழையான செய்திகளைப் பரப்பும் தளங்கள் பற்றி கண்காணிக்கப்படுவதாகவும், அதற்கு எதிராக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



அத்துருகிரியவில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் அன்ரனோவ் விமானம் விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதில் விமானம் விழுந்து நொருங்கியுள்ளதை விமானம் விழுந்ததனால் சேதமடைந்த வீட்டையும் விசாரணையில் ஈடுபடும் நீதிபதியையும் காணலாம்.

# அறநெறிப்பாடசாலை நிர்மாணப்பணி பூர்த்தி

(வடமராட்சி)

பருத்தித்துறை புற்றளைச் சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை 16 இலட்சம் ரூபா செலவில் ஆலய பரிபாலன சபை அலுவலகத்தையும், அறநெறிப்பாடசாலையையும் கொண்ட மாடிக் கட்டடமொன்றை நிர்மாணித்து பூர்த்தியாக்கியுள்ளது. இவ் ஆலய பரிபாலனசபை அலுவலகமும், அறநெறிப்பாடசாலையும் வெகு விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளதாக பரிபாலன சபை அறிவித்துள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ தேவானந்தா இவ் அறநெறிப்பாடசாலைக்குப் பன்முகப்படுத்தப்பட்டவரவு செலவுத் திட்டத்தினூடாக இரண்டரை இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளார்.

இந்நிதியைக் கொண்டு அறநெறிப் பாடசாலைக்கான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (01)

# ஒரே இரவில் திருட்டு முயற்சி 2 வீடுகளில் முறியடிப்பு

(திருநெல்வேலி)

கல்வியங்காட்டுப் பகுதியில் ஒரே இரவில் இரண்டு வீடுகளில் திருட்டு முயற்சி இடம் பெற்றுள்ளது. மற்றொரு வீட்டில் வீட்டுக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் கொழுவப்பட்டிருந்த புத்தம் புதிய தலைக் கவசம் களவாடப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11.30 மணியளவில் ஒரு வீட்டு வளவுக்குள் இறங்கிய திருடன் சமையலறை பக்கயன்னலூடாக வீட்டுக்குள் எட்டிப் பார்த் துள்ளான். இதனைக்கண்ட வீட்டு உரிமையாளர் கூக்குரலிட திருடன் ஓடிச் சென்று மறைந்துள்ளான்.

பின்னர் நள்ளிரவு 12 மணியளவில் குருக்கள் ஒருவரின் வீட்டு யன்னலூடாகத் திருடன் நோட்டம் விடுவதைக் கண்ட குருக்களின் மனைவி திருடன் திருடன் என சத்தமிட்டுக் கத்தவே திருடன் தப்பியோடியுள்ளான்.

இதற்குப் பிறகு அதிகாலை 1 மணி போல் வர்த்தகர் ஒருவரின் வீட்டு வளவுக்குள் நுழைந்த திருடன் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் மேல் கொழுவியிருந்த புத்தம் புதிய தலைக்கவசத்தைத் திருடிச் சென்றுள்ளான்.

இவை அனைத்தும் ஒரே இரவில் மிக அண்மித்ததாக உள்ள வீடுகளில் இடம் பெற்றதினால் ஒரே திருடனாலேயே இவை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. (137)

# அவையில் பேசப்பட்ட விடயத்தை அதிகாரி விமர்சிக்க உரிமையில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அவையில் பேசப்பட்ட விடயத்தை ஒரு அதிகாரி விமர்சிப்பதற்கு உரிமை இல்லை. இது ஒரு மாகாண சபை உறுப்பினரின் உரிமை மீறல். இங்கு பேசுவதை நீதிமன்றத்தில் கூட விசாரிக்க முடியாது என்பது தான் எமது அரசியல் சட்டம். ஆனால் தவராசா என பெயர் குறிப்பிட்டு பொய் கூறுகிறார் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக உதயன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எனவே அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் ஆனால் அதிகாரி யார் என குறிப்பிடப்படாமையால் பத்திரிகை ஆசிரியரை அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா நேற்று முன்தினம் வடமாகாண சபையில் தெரிவித்தார்.

சிறப்புரிமை மீறல் தொடர்பான பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு உதயன் பத்திரிகையைச் சாடினார். கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வு தொடர்பில் 20 ஆம் திகதி ஐஸ்கிறீமில் அரசியல் விசாரணை அவசியம் எனும் தலைப்பில் அதிகாரிகள் விளக்கம் என்ற உபதலைப்பில், மாகாண சபை உறுப்பினர்களின் குற்றச் சாட்டுக்கு பதிலளித்த சுகாதார துறை அதிகாரிகள் சில விடயங்களை சுட்டிக் காட்டுகின்றனர். தவராசா சுட்டிக் காட்டுவது போன்று உணவகங்கள் மீது தாம் நடவடிக்கைகள் எடுக்கவில்லை என கூறுவது பொய். என்று அதிகாரிகள் கூறியிருப்பதாக உதயன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இது உறுப்பினரின் உரிமை மீறல். இதற்கு மாகாண சபைச் சட்டத்தின் கீழ் பிரிவு 36/3 படி சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுவிற்கு இந்த விடயத்தை செயலாளருக்கு அறிவித்து அதன் மூலம் அந்த அதிகாரியை அழைத்து விசாரிக்க வேண்டும். இங்கு அதிகாரி யார் என குறிப்பிடப் படாத நிலையில் முன்னோடியாக உதயன் பத்திரிகை ஆசிரியரை அழைத்து அந்த அதிகாரி யார் அவ்வாறு அவர்கள் செயற்குழு முன் ஆஜராக தவறினால், அல்லது பத்திரிகை சுதந்திரம் என்ற போர்வையில் விபரத்தை தர மறுத்தால் அப் பத்திரிகையிள் பிரதிநிதிகளை சபை அமர்வுகளின் போது செய்தி சேகரிப்பதற்கு தடைசெய்ய வேண்டும் எனவும் இது தனியே எனது பிரச்சினை அல்ல எல்லா உறுப்பினர்களுக்கும் எழக்கூடிய பிரச்சினை எனவே இதனை கவனத்தில் எடுத்து இப்பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில், இது தொடர்பில் தான் சபை நடவடிக்கை செயற்குழுவிற்கு சமர்ப்பிப்பதாக அவைத் தலைவர் தெரிவித்தார். (இ)



யாழ்.தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரனின் 63 ஆவது பிறந்ததின நிகழ்வு அண்மையில் தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றபோது...

# முரசின் இன்றைய பலன்

(13.12.2014 சனிக்கிழமை)

ஐய வருஷம் கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி.
சப்தமி / அமிர்த சித்தம்.
மக நட்சத்திரம் காலை மு.ப. 11.37 வரை. பின் பூரம்.
இராகு காலம 09.20 - 10.50 வரை. சுபநேரம 03.20 - 04.50 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
வெளியூர்உறவினர்கள்வருகையினால்மகிழ்வு, பாதுகாப்பில்கூடிய கவனம்எடுப்பதினால்தொல்லை நீங்கும், சுவீப் அதிர்ஷமுண்டு.

**ரிஷபம்**
பொறுப்பின்றி கடன் கொடுப்பதை மனையாள் தடுத்துவிடல், வெளி நாட்டில் கற்க விசா கிடைத்தல்.

**மிதுனம்**
சட்டவிரோத மின் தொடர்பால் தண்டம் கட்டல், அரசுப் பதவி கிடைத்தல்.

**கடகம்**
சக ஊழியர்களின் ஒத்துழைப்பினால் பணிச்சுமை அற்றுவிடல், நோய் அகல தெய்வ தலத்திற்கு செல்தல்.

**சிம்மம்**
கடனை அடைக்க மேலும் கடன்படுதல், காரிய சித்திக்காக அலைச்சல் ஏற்படல்.

**கன்னி**
பயணம் பற்றிச்சிந்தித்தல், சுவீப் அதிர்ஷ்டம் ஏற்படலாம்.

**துலாம்**
புதியமனை அமைக்க ஏற்ற இடத்தைத்தெரிவு செய்தல், பங்கினை குறித்து தனித்தியங்க முயலுதல்.

**விருச்சிகம்**
பெற்றோர் நினைவாக தானதர்மம் செய்தல், நம்பகத் தன்மையால் பொருட்கள் கொள்வனவு.

**தனுசு**
அட்டமத்துக் குரு இருப்பதால் பயணத்தைக்கைவிடல், சரியாகக் கணக்கிட்டு பணத்தைப்பெறல்.

**மகரம்**
குழந்தைப்பாக்கியம் கிட்டியதால் ஆனந்தம், நட்பினை துண்டித்தல்.

**கும்பம்**
வாகன போக்குவரத்தில் மிருகங்களால் விபத்து ஏற்பட வாய்ப்பு.

**மீனம்**
எதிர்மறை எண்ணங்களைக் கைவிட்டு பணியில் முழுக்கவனததையும் செலுத்துங்கள்.

விளையாட்டு செய்திகள்




இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையேயான பளுதூக்கும் போட்டியில் முதல் இடத்தைப்பெற்ற எம்.எம்.சித்தீக் இவ்வருட உலக பல்கலைக்கழகங்களிற்கிடையிலான பளுதூக்கும் போட்டியிலும் பங்குபற்றினார். இதன் மூலம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்த்த பளுதூக்கும் அணி வீரருக்கு பல்கலைக்கழக நண்பர்களால் மிக அண்மையில் மதிப்பளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக உடற் கல்விப் பணிப்பாளர் மா.இளம்பிறையன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (90)

# சமநிலை

(லண்டன்)

லண்டன் செஸ் கிளாசிக் போட்டியில் ஆனந்த் - கிராம்னிக் இடையே நடந்த முதல் சுற்று சமநிலையானது. ஆனந்த், பேபியானோ கருணா, நாகமுரா, கிராம்னிக், அடம்ஸ், அனிஷ் கிரி ஆகியோர் பங்குபெறும் லண்டன் செஸ் கிளாசிக் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது.

ஆனந்த் - கிராம்னிக் இடையே நடந்த முதல் சுற்றுப் போட்டி சமநிலையானது. பிற ஆட்டங்களில், இங்கிலாந்தைச் சேர்ந்த அடம்ஸ் கருணாவைத் தோற்கடித்தார். நாகமுரா - கிரி ஆட்டம் சமநிலையானது. முதல் சுற்றின் முடிவில், அடம்ஸ் முன்னணியில் உள்ளார்.

# குல்கர்னி இணைப்பு



(புதுடில்லி)

இந்திய வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர்குமார், கணுக்கால் காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். இதனால் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான முதல் இரு டெஸ்ட்களில் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

இப்போது 3ஆவது டெஸ்டிலும் அவர் விளையாட வாய்ப்பில்லை என்பது தெரிய வந்துள்ளது. இதை கருத்தில் கொண்டு இந்திய அணியில் வேகப்பந்து வீச்சாளர் தவால் குல்கர்னி கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளார்.




# டோனியை முந்திய ஹோலி

(அடிலெய்ட்)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சதம் விளாசிய ஹோலி இந்திய அணித்தலைவர் டோனியை முந்தியுள்ளார்.

சர்வதேச டெஸ்ட் அரங்கில் டோனி இதுவரை 88 போட்டிகளில் விளையாடி 6 சதம் அடித்துள்ளார். அடிலெய்ட் ஆட்டத்தில் அசத்திய ஹோலி 30 டெஸ்டில் 7ஆவது சதத்தை அடித்து டோனியை ஓரங்கட்டியுள்ளார்.

மேலும் அவுஸ்ரேலியா சென்றுள்ள தற்போதைய இந்திய அணியில் ஹோலி தான் அதிக சதம் அடித்தவராக இருக்கிறார். இவருக்கு அடுத்த இடத்தில் புஜாரா (6 சதம்) இருக்கிறார்.

# வென்றது இங்கிலாந்து




(கண்டி)

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் கண்டி பல்லேகல விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஐந்தாவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இப்போட்டியினல் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இலங்கை சார்பில் குமார் சங்கக்கார 91 ஓட்டங்களையும் மத்தியூஸ் 40 ஓட்டங்களையும் டில்சான் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாட இருந்த நிலையில் மழை காரணமாக போட்டி நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதன்படி நேற்று முன்தினம் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 49.1 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 240 ஓட்டங்கள் பெற்று வெற்றியடைந்தது.

இங்கிலாந்து சார்பில் டெய்லர் 68 ஓட்டங்களையும் ரூட் ஆட்டமிழக்காமல் 104 ஓட்டங்களையும் பெற்றனர்.

சதம் அடித்த இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

இவ்விரு அணிகளுக்கும் இடையில் இன்னும் இரு போட்டிகள் மீதமுள்ள நிலையில் இலங்கை மூன்று போட்டிகளிலும் இங்கிலாந்து இரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

# அடிலெய்ட்டில் ஆஸி. முன்னிலை

(அடிலெய்ட்)

இந்திய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 363 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளை போடர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் அவுஸ்ரேலியாவின் அடிலெய்ட்டில் நடைபெற்று வருகின்றது.

முதல் இனிங்ஸிற்காக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 369 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை இந்திய அணி தொடர்ந்தது. சிறப்பாக ஆடி வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ளும் முனைப்புடன் ரோகித் சர்மா முனைந்தபோதிலும் நதன் லயனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விக்கெட்டைத் தாரை வார்த்தார். இதனைத் தொடர்ந்து மொகமட் சமி அதிரடியாக ஆடியபோதிலும் மறுமுனையில் விக்கெட்டுக்கள் வேகமாகச் சரிக்கப்பட்டன. நிறைவில் இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 444 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொகமட் சமி 34, ஷாகா 25, ரோகித் சர்மா 42, ஹோலி 115 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நதன் லயன் ஐந்து, ஜோன்சன், பீற்றர் சிடில் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

73 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி வரும் அவுஸ்ரேலிய அணி டேவிட் வோர்னரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் முதல் இனிங்ஸில் சதம் விளாசிய டேவிட் வோர்னர் 166 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 11 பவுண்டரிகள் அடங்கலாக 102, வட்சன் 33, ரோஜர்ஸ் 21, ஸ்ரீபன் ஸ்மித் 52, மிட்சல் மார்ஷ் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கே.வி. சர்மா இரண்டு, மொகமட் சமி, இசாந்த் சர்மா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஐந்து விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் அவுஸ்ரேலிய அணி 363 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.



# முதலிடத்தில் மெஸ்சி




(பார்சிலோனா)

ஐரோப்பிய கால்பந்து தொடர்களில் அதிக கோல் அடித்தவர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்தார் மெஸ்சி.

ஐரோப்பிய கால்பந்து கிளப் அணிகளுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொர்டர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில், பார்சிலோனா அணி 3-1 என்ற கோல் கணக்கில் பி.எஸ்.ஜி அணியை வென்றது.

பார்சிலோனா சார்பில் லியோனல் மெஸ்சி, நெய்மர், லூயிஸ் சாரஸ் தலா ஒரு கோல் அடித்தனர். பி.எஸ்.ஜி., அணிக்கு இப்ராஹிமோவிச் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார்.

இப்போட்டியில் ஒரு கோல் அடித்த பார்சிலோனா வீரர் மெஸ்சி, ஒட்டுமொத்த ஐரோப்பிய தொடர்களில் அதிக கோல் அடித்தவர்கள் பட்டியலில் முதலிடத்தை ரியல் மட்ரிட் அணியின் ஜாம்பவான் ராலுடன் பகிர்ந்து கொண்டார்.


இவர்கள் இருவரும் தலா 76 கோல் அடித்துள்ளனர். இப்பட்டியலின் மூன்றாவது இடத்தில் ரியல் மட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ (75 கோல்) உள்ளார்.

ஆர்ஜென்ரீன வீரர் மெஸ்சி, சம்பியன்ஸ் லீக் தொடரில் 75, சூப்பர் கோப்பை இறுதிப் போட்டியில் (2011) ஒரு கோல் என மொத்தம் 76 கோல் அடித்துள்ளார்.

ஏற்கனவே இவர் சம்பியன்ஸ் லீக், (75 கோல்), லா லிகா (256) தொடர்களில் அதிக கோல் அடித்தவர்கள் பட்டியலில் முதலிடம் வகிக்கிறார். பார்சிலோனா அணிக்காக (375) அதிக கோல் அடித்தவர்கள் வரிசையிலும் முன்னிலை வகிக்கிறார்.

# பெண்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ள தலைமைப் பண்பை வளர்க்க வேண்டும்

## ஈ.பி.டி.பி. யாழ். மாவட்டஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சமுதாயத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இல்லாதொழித்து எதிர்காலத்தில் மனிதநேயமும் சமூகப்பற்றும் தலைமைப்பண்பும் மிக்க பெண்களாக எமதுதேச பெண்கள் உருவாகவேண்டும் என்பது தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் எதிர்பார்ப்பாகும் இதற்காகத்தான் தொகுதிகள் தோறும பெண்களுக்கான மாதர் அமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் பகுதிக்கான மாதர் அமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு பிரதேச ஈழமக்கள் ஜனநாயக கட்சி அமைப்பாளர் வலன்ரயன் தல்லமையில் கடந்த செவ்வாய்ககிழமை சுன்னாகம் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது

ஒவ்வொருவரினதும் வாழ்வில் மாற்றங்கள் வரவேண்டுமாயின் கூட்டுமுயற்சிகளும் இணக்கப்பாடும் ஒவ்வொருவர் மனதிலும் வளரவேண்டும். இந்த நிலைப்பாடு பெண்கள் மத்தியில் அதிகம் உருவாகுமானால் நிச்சயமாக எமது வாழ்வாதாரங்களும் தேவைகளும் தானாக வளர்க்கப்பட்டுவிடும்.

இன்று உருவாக்கப்பட்டுள்ள பெண்கள் அமைப்பு என்பது சுயநலத்துக்காகவும் குடும்ப நலனுக்காகவும் செயற்படாது தாம் பெற்றுக்கொள்வதை மற்றவர்களும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் தமது பகுதிகளை வளர்க்க பாடுபடுபவர்களாக இருக்கவேண்டும்.

ஒவ்வொரு தமிழ் குடும்பங்களினதும் வாழ்வில் வசந்தங்கள் மலரவேண்டும் என்பதற்காகத்தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத்தகைய அமைப்புகளை உருவாக்கி வருகின்றார். அவரது கரங்களை என்றும் பலப்படுத்திக்கொள்வீர்களானால் என்றுமே உங்கள் வாழ்வில் வசந்தங்கள் குடிகொண்டிருக்கும் என்றார்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் தேசிய அமைப்பாளர் பசுபதி, வலி. தெற்கு அமைப்பாளர் வலன்ரயன்,வலி.தெற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அரிகரன் மற்றும் சசி ஆகியோருடன் பொதுச்சபை உறுப்பினர்கள் மற்றும் பெண்களும் கலந்துகொண்டனர்.

# கடற்றொழில் சார் கற்கை விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி 2015ஆம் ஆண்டிற்கான தொழிற் கற்கை நெறிகள் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். இக்கற்கை நெறிகளாவன மீன்பிடி தொழில்நுட்பம் (NVQ-3), கடலக வரைபடம் வாசித்த லும் செய்மதி தொடர்பாடலும் (GPS), வெளி இணைப்பு இயந்திர பொறிவலர், கடலக ஓட்டுநர் பயிற்சிநெறி, உயிர் பாதுகாப்பு பயிற்சிநெறி, சுழியோடிப் பயிற்சிநெறி (NVQ-4) கட்லக மாலுமி பயிற்சி நெறி, கரையோர வளங்களின் முகாமைத்துவம் (NVQ-4) மீன் வளர்ப்பு மற்றும் மீன்பிடி முகாமைத்துவம் (NVQ-4) படகு உற்பத்தி செய்தலும் திருத்துதலும் (NVQ-4) கடல் இயந்திரவியல் தொழில்நுட்பம் (NVQ-4) ஆகியனவாகும்.

இக் கற்கை நெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் சுயவிபரங்களை கற்க விரும்பும் கற்கை நெறியினை குறிப்பிட்டு அலுவலக நாட்களில் நேரடியாகவோ தபால் மூலமாகவோ விண்ணப்பிக்க முடியும். மேலதிக தகவல்களை 021 222 6251 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# இளைஞர் கழகங்களை புனரமைக்கும் செயற்பாடு

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளன எல்லைகுள் இளைஞர் கழகங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக மானிப்பாய் மேற்கு ஜே/140 இளைஞர் கழகத்தின் புனரமைப்புக் கூட்டம் மானிப்பாய் மருததடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இன்று மாலை 4.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. புதிய ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு, செயற்றிட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

எனவே இக் கூட்டத்திற்கு ஏற்கனவே அங்கத்தவர்களாக உள்ள மானிப்பாய் மேற்கு ஜே/140 இளைஞர் கழகத்தின் உறுப்பினர்கள் தவறாது சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. அத்துடன் மானிப்பாய் மேற்கு ஜே/140 கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட 13 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்ட புதிதாக இணைய விரும்பும் இளைஞர் யுவதிகளும் கலந்து கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களை 0771641413 என்னும் இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என மானிப்பாய் மேற்கு ஜே/140 இளைஞர் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (48)



முல்லைத்தீவு கோம்பாவில் வித்தியாலயத்தில் இவ்வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். இதில் மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள் நிற்பதைக் காணலாம். (90)

# சனிப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## கும்பம்

**(அவிட்டம் 3,4ஆம்பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3ஆம்பாதம்)**

**குனியக் குனியக் குட்டினாலும் கோபப்படாத கும்பராசிக்காரர்களே!**

இதுவரை உங்கள் ராசிக்கு 9ஆம் வீட்டில் அமர்ந்து கொண்டு கிடைக்கின்ற வாய்ப்புகளையெல்லாம் தட்டி விட்டதுடன், கையில் ஒரு காசும் தங்கவிடாமல் துடைத் தெடுத்த உங்கள் ராசிநாதன் சனிபகவான் இப்போது 16.12.2014 முதல் 17.12.2017 வரை உள்ள காலகட்டங்களில் 10ஆம் வீட்டில் அமர்வதால் புதிய முயற்சிகள் வெற்றியடையும். தொலைநோக்குச் சிந்தனை அதிகரிக்கும். மனப் போராட்டங்கள் ஓயும். குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். எங்கு சென்றாலும் முதல் மரியாதை கிடைக்கும். உங்களுடைய நிர்வாகத் திறன், ஆளுமைத் திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள்.

உங்களுடைய ஆலோசனைக்கு இனி முக்கியத்துவம் தருவார்கள். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்து கொள்வார்கள். தந்தையாரின் உடல் நலம் சீராகும். தந்தைவழி உறவினர்களுடனான கசப்புணர்வுகள் நீங்கும். பிதுர்வழி சொத்தைப் பெறுவதில் இருந்த தடைகள் நீங்கும்.

### சனிபகவான் நட்சத்திர சஞ்சாரப் பலன்கள்

16.12.2014 முதல் 24.01.2015 வரை மற்றும் 30.04.2015 முதல் 13.6.2015 வரை மற்றும் 06.9.2015 முதல் 17.10.2015 வரை உங்கள் தனாதிபதி குருவின் சாரத்தில் விசாக நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் 10ஆம் வீட்டில் சனி செல்வதால் சமயோஜிதமாகப் பேசி சாதிப்பீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். விரும்பிய பொருட்களை வாங்குவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வழக்கு சாதகமாகும். வாகன வசதியுண்டு. சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். புது பதவிக்கு உங்களது பெயர் பரிந்துரை செய்யப்படும்.

14.6.2015 முதல் 5.9.2015 வரை உங்கள் ராசிக்கு 9ஆம் வீடான துலாம் ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் சனி செல்வதால் இக்காலகட்டத்தில் எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். கடந்த கால சுகமான அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். பணம் வந்தாலும் பற்றாக்குறையும் நீடிக்கும்.

30.04.2015 முதல் 01.08.2015 வரை குருபகவானின் விசாக நட்சத்திரத்திலேயே சனி வக்கரித்து செல்வதால் புது முதலீடுகளை தவிர்ப்பது நல்லது. பிரிவுகள், விபத்துகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. முக்கிய ஆவணங்களை கவனமாக கையாளுங்கள். மகான்கள், சித்தர்களின் ஜீவசமாதி சென்று வருவீர்கள். திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு கூடி வரும்.

உங்கள் ராசியாதிபதியும்-விரயாதிபதியுமான சனிபகவான் தன் சுய நட்சத்திரமான அனுஷ நட்சத்திரத்தில் 25.01.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 18.10.2015 முதல் 15.11.2016 வரை செல்வதால் இக்காலகட்டத்தில் உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வீடு கட்டுவீர்கள்.

15.3.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 19.5.2016 முதல் 12.08.2016 வரை உள்ள காலகட்டங்களில் சனிபகவான் அனுஷ நட்சத்திரத்திலேயே வக்ரமாவதால் சொத்துப் பிரச்சினைக்கு சுமூக தீர்வு காண்பது நல்லது. மனைவி வழி உறவினர்களுடன் பிணக்குகள் வரும். விலையுயர்ந்த தங்க நகைகள் வாங்குவீர்கள். நட்பால் ஆதாயமடைவீர்கள்.

16.11.2016 முதல் 17.12.2017 வரை உங்கள் அஷ்டம-பூர்வ புண்யாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் சனிபகவான் செல்வதால் உங்களின் அடிப்படை வசதிகள் பெருகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகன் கெட்டபழக்கங்களிலிருந்து விடுபடுவார். பூர்வீக சொத்தில் சில மாற்றம் செய்வீர்கள். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பெருமை உண்டு. வெளிநாடு செல்ல விசா கிடைக்கும்.

10ஆம் வீட்டில் சனி வந்தமர்வதால் உத்தியோகத்தில் உயர்வு உண்டு. உயரதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். என்றாலும் வதந்திகளும், வீண் பழியும் வரக்கூடும். திடீர் இடமாற்றம் உண்டு. வேலைச்சுமை அதிகரித்தாலும் புதிய அனுபவங்களை கற்றுக் கொள்வீர்கள்.

கன்னிப் பெண்கள் போலியாக பழகியவர்களிடமிருந்து ஒதுங்குவீர்கள். காதல் வேறு, நட்பு வேறு என்பதை உணருவீர்கள். தள்ளிப் போன திருமணம் கூடி வரும். மாணவ-மாணவிகள் படிப்பில் முன்னேறுவீர்கள். ஆசிரியர்கள் பக்கபலமாக இருப்பார்கள். நல்ல நண்பர்கள் அறிமுகமாவார்கள். போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள்.

இந்த சனி மாற்றம் குடத்தில் விழுந்த விளக்காய் இருந்த உங்களை கோபுர விளக்காய் ஒளிர வைக்கும்.

**பரிகாரம்!**

**நவக்கிரகங்களை தொடர்ந்து சுற்றுங்கள். ஞானிகளை சந்தித்து காணிக்கை செலுத்திஆசி பெறுங்கள். வசதி படைத்தவர்கள் ஏழைகள் பிழைக்க பணம் கொடுத்து உதவி செய்யலாம். விநாயகரையும், ஆஞ்சநேயரையும் வணங்கி வாருங்கள். காக்கைக்கு அன்னமிட்டு உண்ணுங்கள். முருகன் கோவிலுக்கு சென்று வாருங்கள்.**

(நாளை மீனம்)

கதம்பம்


# புற்றுநோய் 1

- பத்ரி -

நம் பலருக்கும் கான்சரால் பாதிக்கப்பட்ட ஓர் உறவினர் இருப்பார். மருத்துவ முன்னேற்றம் அதிகமாவதால், ஆயுட்காலம் அதிகமாக அதிகமாக, கான்சர் ஒன்றுதான் நம் வாழ்வை முடித்து வைக்கக்கூடிய ஒன்றாக இருக்கப் போகிறது. கான்சர் பற்றி நாம் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

**(1) கான்சர் என்பது எம்மாதிரியான நோய்?**

நம் உடலில் பல ஆயிரம் வகையான கலங்கள் உள்ளன.




ஒவ்வொரு வகை கலமும் தினம் தினம் புதிதாக உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. ஒரு கலம் இரண்டாகப் பிரிந்து, பின் அவை நான்காகப் பிரிந்து, இப்படியே இவை பெருகுகின்றன. ஆனால் இவை ஒருவிதமாக கொரியோ-கிராப் செய்யப்பட்ட ஒழுங்கான நடத்தை கொண்டவை. இரசாயன சிக்னல்கள் இந்த கலங்களின் பிரிவைக் கட்டுப்படுத்துகின்றன. வேண்டிய அளவு கலங்கள் உருவானதும் கலம் பிரிவது நின்றுவிடும்.

ஆனால் ஜெனட்டிக் மியூட்டேஷன் காரணமாக சில இடங்களில் தவறுகள் நிகழ்ந்துவிடுகின்றன. மியூட்டேஷன் பற்றி சற்று விரிவாகப் பின்னர் சொல்கிறேன். இந்தத் தவறின் காரண-மாக, நமக்கு வேண்டாத கலங்கள் சில உருவாகின்றன. அதுமட்டுமின்றி இவை படுவேக மாகவும் கட்டுப்பாடே இன்றியும் பிரிந்து அதிகரிக்கத் தொடங்கு கின்றன.

விளைவுதான் கான்சர் எனப்படும் புற்றுநோய்.

இந்த மியூட்டேஷனை உருவாக்குவது எது? சிலவகை கான்சர் மியூட்டேஷன்களை நுண்ணுயிரிகளான வைரஸ்கள் உருவாக்கும். சில கான்சர் மியூட்டேஷன்கள் நம் முன்னோர்களின் கொடையாக நம் உடலிலேயே இருப்பவை. ரிசசிவ் ஜீன்களான இவை இரட்டையாக ஓர் உடலில் தோன்றும்போது கான்சர் நிகழ ஆரம்பிக்கும். இன்னும் பல நேரங்களில் நுரையீரலில் படியும் சிகரெட் கரி, தார், வாயில் குதப்பும் புகையிலை, உடலுக்குள் செல்லும் அஸ்பெஸ்டாஸ் போன்ற கார்சினோஜென்கள் நம் கலங்களில் மியூட்டேஷனை ஏற்படுத்தி கான்சரை உருவாக்கும்.

**(2) கான்சர் எங்கெல்லாம் வரலாம்?**

இரத்தப் புற்றுநோய். தோல் புற்று நோய்.



வயிறு, உடலின் உள் உறுப்புகள், மார்பகம், புரொஸ்டேட், சிறுநீரகம், நுரையீரல், கருப்பை, சினைப்பை, பித்தப்பை, ஈரல், ஆசனவாய் என்று பல பகுதிகளிலும் புற்றுநோய் வரும்.

இரத்தத்தில் வரும் புற்றுநோய் மற்றவற்றிலிருந்து வித்தியாசமானது. இங்கு கட்டியாக ஒன்றும் இருக்காது. இரத்த வெள்ளை அணுக்கள் சரமாரி யாக அதிகரிக்கத் தொடங்கும். இதனால் உடல் நிறம் வெளுக்கும். லுகேமியா என்று இந்த நோய்க்குப் பெயர். மிக அதிகமாக அதிகரிக்கும் முதிர்ச்சி அடையாத வெள்ளை அணுக்கள் இரத்தத்தின் சமநிலையைக் குலைத்துவிடும்.

பிற கான்சர்கள் எல்லாம் திட வடிவமானவை. நண்டு போல் கிளை பரப்பிச் செல்லும் என்பதனால்தான் கான்சர் என்ற பெயர். கட்டி என்று பொருள்தரும் "ஆன்கோ" என்ற பெயரும் இதற்கு உண்டு. கறையான் புற்றுபோல் பல்கிக் கிளைப்பதால் இதற்குத் தமிழில் புற்றுநோய் என்று பெயர் வைத்திருக்கிறோம்.

**(3) புற்றுநோயிலிருந்து தப்பிக்க முடியுமா, முடியாதா?**

ஒரு புற்றுநோய் மருத்துவமனை வாசலில் உள்ள தட்டியில் "புற்று நோய் தொற்று நோயல்ல. அதிலிருந்து தப்பிக்கலாம்" என்று எழுதியுள்ளது. இது முற்றிலும் உண்மையல்ல. முக்கியமாக, "புற்று நோய்களுக்கெல்லாம் மருந்து இருக்கிறது, தப்பித்துவிடலாம்" என்ற பொருள் இதில் வருகிறது. இது உண்மையல்ல.

சிலவகைப் புற்றுநோய்களை ஆரம்ப நிலையில் கண்டுபிடித்துவிட்டால், சிகிச்சைக்குப் பின் பல ஆண்டுகள் உயிர் வாழலாம். ஆனால் முற்றி, பரவி, மெடாஸ்டேசிஸ் ஏற்பட்டுவிட்டால், காப்பாற்ற முடியாது. பலவகைப் புற்று நோய்களை நாம் கண்டுபிடிப்பதற்குள் காலம் கடந்துவிடும்.

**பொதுவாக, புற்றுநோயைத் தீர்த்துக் கட்ட கீழ்க்கண்ட வழிமுறைகள் உள்ளன.**

இரத்தப் புற்றுநோய்க்குப் பெரும்பாலும் கெமோதெரபிதான் சிகிச்சை. சிலவகை இரத்தப் புற்று நோய்களின் செயல்பாட்டைத் தடுக்க மாற்று மருந்து உள்ளது (எல்லாவற்றுக் கும் அல்ல.) இவ்வகை இரத்தப் புற்றுநோய்களில் சில என்சைம்கள் உருவாவதில்லை. எனவேதான் வெள்ளை அணுக்கள் தாறுமாறாக உருவாகின்றன. எந்த என்சைம் உருவாவதில்லையோ அதனை உடலில் ஏற்படுத்திவிட்டால் போதும். (கிட்டத்தட்ட டயபெடிஸுக்கு இன்சுலின் போட்டுக்கொள்வதுபோல.) ஆனால் இந்த மருந்தைச் சாப்பிட்டுக்கொண்டே இருக்கவேண்டு[ம்].

**பிற அனைத்துக் கான்சரிலும் கீழ்க்கண்ட வழிகளைப் பின்பற்றவேண்டும்:**

1. கட்டியை நீக்க அறுவைச் சிகிச்சை
2. கெமோதெரப்பி
3. ரேடியோதெரப்பி

கட்டி மிகச் சிறிதாக இருக்கும்போதே கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது கட்டியை வெட்டி எடுக்க முடியாத இடமாக இருந்தால் நேராக கெமோதெரப்பிக்குச் செல்லவேண்டியிருக்கும்.

[தொடரும்]

# காவி... காவிய... காவியத்தலைவன்

மணிரத்னம் "இருவர்" எடுத்ததைப்போல கமல்-ரஜனியை வைத்து காவியத் தலைவனை காவியிருக்கிறார்கள். இருவரையும் இருபதிற்கு (வயசும் வருடமும்) கொண்டுபோய் அவர்களது கதையை படமாக்கியிருக்கிறார்களோ என்று ஒரு சந்தேகம் வலுக்கிறது. ஒரு குருவிற்கு இரண்டு சிஷ்யர்கள். ஒருவர் குருவி டம் சாதி அடையாளத் துடன் ஒப்படைக்கப்பட்ட வர். மற்றவர் சாலையில் கண்டு எடுக்கப்பட்டவர்.

இருவரும் வளருகிறார்கள். கர்ணமோட்சம் நாடகத்தில் கர்ணனைக் கொன்ற அருச்சுனன் ஒரு புலம்பு புலம்பி கர்ணனை ஓவர் டேக் செய்துவிடுகிறார். அதன்பின் நடிப்பதில் போட்டியாகி முதலாமவரை இரண்டாமவர் பின்தள்ளி விடுகிறார். தான் உலகமெல்லாம் சுற்றி சேர்த்துவைத்த உலக்கைநாயகன் பெயரை தட்டிப்பறித்து தேசத்தியாகி ஆகிவிடுகிறார் மற்றவர். அப்பப்போ நடிக்கிறார் நாடகத்திலும்.

தான் இந்த அளவு நடிக்க அவர்தான் காரணம் என்று தனது மானசீகத்தை வேறு கடைசியில் முன்வைக்கிறார். உன் தலையில் நீயே வாரிப் போட்டுக் கொண்ட மண்தான் நான் என்று. அதைக் கேட்டு முதலாமவர் குரு குரு என வரும் குற்ற உணர்ச்சியில் மறுகிவிடுகிறார். கொலை செய்வதா? வேண்டாமா? என்ற குழப்பத்தில் இயக்குநர், இரண்டுபேரும் துப்பாக்கியை இழுத்து பிடிக்க, என்னைக் கொல்லு கொல்லு என்று நம்மை கொல்கிறார்கள்.

கடைசியில் இரண்டாமவர் செத்து தியாகியாகி, முதலாமவர் காசிக்குப் போய் கங்கையில் தனது நண்பனின் அஸ்தியுடன் ஜலசமாதி அடைகிறார். இதற்குப் பின்பலங்கள்தான் வெள்ளைக்காரன், காந்தி, சங்கரதாஸ் சுவாமிகள், ஏ.ஆர் ரகுமான், தமிழின் நம்பர் வண் நாலாசிரியர், அப்புறம் டப்பாங்குத்து (வண்டிக்குத்து வண்டியில் ஏறி குத்துவதால்), கதாநாயகி உடலில் மூக்கை உரசி உரசிப் பாடும் டூயட் எல்லாம்.

இடையில் எம்ஜியார் போல் அல்லது தமிழ் காதல் சினிமாவின் எம்ஜியாரைசேஷன் சூத்திரங் களைப்போல, சிப்பாயாக இருந்தால் இளவரசியை காதலி, கண்டக்டராக இருந்தால் பஸ் ஓனர் மகளை காதலி என்பதாக நாடக நடிகர் இளவரசியை காதலித்து, நள்ளிரவில் கையை காலை ஆட்டி (அதுவும் எம்ஜியார்



போல செய்ய முயன்று வருமா மற்றவர்களுக்கு அது.) தேவ் ஆனந்தை காப்பியடித்து கையை பின்னால் கட்டிக் கொண்டு காலை எக்ஸ் வடிவில் முன்னே பின்னே வைத்து ஆட்டியே தமிழகத்தில் நாயகனாக ஓட்டிய ரவிச்சந்திரன் போல காதல் பாடல் காட்சிகளில் சித்தார்த் முயன்றிருக்கிறார். மீசையுள்ள ரவிச்சந்திரன் மீசையில்லா எம்ஜியார் வே'ம் போட்டதைப் போலிருக்கிறது.

ஆறுதல் தருவது வழக்கம்போல் உத்தம வில்ல னாக வரும் பிரிதிவிராஜ். அவர் தனது பாத்திரத்தை சரியாக செய்து உள்ளார். ஆனாலும் அவருக்கு இந்த வேடம் தந்திருப்பது நடிகை ராதிகாவை வைத்து இப்போ அலைகள் ஓய்தில்லை எடுத்தால் அதில் வரும் ஸ்வீட் சிக்ஸ்டீன் ராதாவாக ராதிகா. வேடமிட்டதைப்போல உள்ளது. (அவர் இப்போ சின்னத்திரையில் வாணி ராணியாக இப்படித்தான் போட்டு பாடாய் படுத்திக் கொண்டிருக்கிறார். ஜீன்ஸ் பட ராதிகாவாக ஒரு கிராமத்து அப்புராணி வேடம். அது ராணியா? வாணியா? சகிப்பின் உச்சத்திற்கு கொண்டு போகிறார் நம்மை.)

'காவிய சோகம் என்னவென்றால், வண்ணக்கோகிலம் வடிவாம்பாள் (கொடு முடிக் கோகிலம் சுந்தராம்பாள் நல்லவேளை உயிரோடு இல்லை.) அடிக்கும் கூத்துகள் இதை எல்லாம் மிஞ்சியவை. (ஆனாலும் வடிவாக நடித்த நடிகை வடிவாத்தான் உள்ளார். இருந்தாலும் அந்த இளவரசியாக நடித்த நடிகை மழலை பேசுவது குழந்தைக் காதலை ஊக்குவிப்பதைப்போல உள்ளது.) அவர் தீவிரமாக காளியப்ப பாகவதரை காதலிக்கிறார். அவரை வண்ணக் கோகிலம் வடிவாம்பாளாக உலகப் புகழ்பெற வைத்த கோமதிநாயகத்தை பிடிக்காமல் காளியப்ப பாகவதரை காதலியோ காதலி என்று காதலிக்கிறார்.

காதலின் நோக்கம் திருமணம் ஆகாமலே காதலனிடம் குழந்தையை பெற்றுக் கொண்டு காளியப்ப பாகவதர் என்ற நடிகனின் வாரிசை உருவாக்கி அந்த மகாநடிகனை (மகாநடிகன் சத்யராஜ் அல்ல) அவனது நடிப்பை இந்த உலகில் தலைமுறை தலை முறையாக காப்பதுதான் அவளது கடமை யாம். இந்த சோகத்தை எந்த காவியத்தில் சொல்லி அழுவது. அது எப்படித்தான் இந்த சீரியஸ் இயக்கு நர்களுக்கு இப்படி எல்லாம் நகைச்சுவையாக சிந்திக்க தெரியுமோ. அந்த கடல் காக்கும் கன்னியாகுமரி அம்மனுக்கே வெளிச்சம்.

இப்படியாகத்தானே இந்த நூற்றாண்டுக்கால தமிழ் நாடக வரலாற்றை நறுக்கென்று மூன்று மணிநேரத்தில் எடுத்து, அதில் தமிழ் சினிமா "காவிய...த் தலைவர்கள்" கதையையும் கலந்து நமக்கு தந்து, அதில் குருவாகப்பட்டவர் யார் என்று நீங்களே ஊகித்தறியும் விளையாட்டையும் வைத்து, நமது அறிவை விசாலிக்கவும் விகசிக்கவும் வைத்த காவியத் தலைவன் குழுவினருக்கு... கும்பிடுறேஞ் சாமியோவ்!!!

- சந்தேக சாம்பிராணி

# தோசை சுடுவதற்கு...!



★ தோசைக்காக மதியம்தான் மா அரைத்தீர்கள். ஆனால் இரவே தோசை தயாரித்தாக வேண்டும். என்ன செய்வீர்கள்? தோசைமா இருக்கும் பாத்திரத்தை மூடி அப்படியே வெயிலில் வைக்கலாம். அல்லது குக்கரில் இருக்கும் சூடான நீரிலும் மா பாத்திரத்தை வைக்கலாம். சட்டென்று புளித்து தோசைமா தயாராகிவிடும்.

★ தோசைக் கல்லின் ஓரம் எண்ணெய்க் கறை படிந்து இறுகிப் போய்விட்டதா? அடுப்பை ஏற்றி தோசைக்கல்லின் விளிம்புப் பகுதியை மட்டும் எரியும் தீயில் வட்டமாகச் சூடேற்றி உடனே ஒரு மரக்கரண்டியால் சுரண்டினால் இறுகியுள்ள பிசுக்குப் பகுதி இளகி உதிர்ந்துவிடும்.

★ ஒவ்வொரு முறையும் தோசை ஊற்றுவதற்கு முன்பாக, தோசைக் கல்லில் தண்ணீர் தெளித்து, துடைத்துவிட்டு ஊற்றினால் தோசை கருகாது.

★ தோசை மா புளித்து விட்டதா? அதில் பாதியளவு கோதுமை மா, பாதியளவு ரவை கலந்து தேவையான உப்பு மற்றும் தண்ணீரைச் சேர்த்து தோசை தயாரித்தால் சுவையான புளிப்பில்லாத தோசை ரெடி.

★ தோசை மாவை அரைக்கும் போதே சிலர் உப்பைச் சேர்த்து அரைத்து விடுவார்கள். அப்படிச் செய்வதைத் தவிர்த்து மாவை அரைத்து எடுத்த பிறகு உப்பு கலந்து வைத்தால் மா நீர்த்துப் போகாது.

★ தோசை மாவில் காம்பு கிள்ளாத வெற்றிலையைப் போட்டு வைத்தால் இரண்டு நாள் ஆனாலும் மா புளிக்காமல் இருக்கும்.

★ அரிசி பருப்பு ஊறவைக்கும் போதே அத்துடன் ஒரு தேக்கரண்டி சவ்வரிசியை ஊறவைத்து அரைத்தால் தோசை மொறு மொறுவென்று வரும். நாலு கப் புழுங்கல் அரிசி முக்கால் கப் உளுத்தம் பருப்பு, கால் கப் சவ்வரிசி, இரண்டு தேக்கரண்டி வெந்தயம் எல்லாவற்றையும் ஒன்றாக ஒரு பாத்திரத்தில் போட்டு அவை மூழ்கும் வரை தண்ணீர் ஊற்றி ஃப்ரிட்ஜில் வைத்து விடுங்கள். அடுத்தநாள் எடுத்து மொத்தமாக கிரைண்டரில் போட்டு அரைத்துப் புளிக்க வைத்தால், மொறு மொறு தோசைக்கும், பூப்போன்ற இட்லிக்கும் மா ரெடி.

★ வீட்டில் உள்ள காய்கறிகளை சிறிது எடுத்து வதக்கி அதனுடன் செத்தல் மிளகாய், பச்சைமிளகாய், சிறிது புளி, உப்பு சேர்த்து அரைத்தால் திடீர் "சட்னி ரெடி".

# மனித உறவுகள் மேம்பட...




குடும்பம் மற்றும் அலுவலகத்தில் மனித உறவுகளில் விரிசல் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்கவும், இதோ சில எளிய வழிகள்:

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும், தேவையில்லாமலும், பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டே இருப்பதை தவிருங்கள்.
- எந்த விஷயத்தையும், பிரச்சினையையும் நாசூக்காகக் கையாளுங்கள். விட்டுக் கொடுங்கள்.
- சில நேரங்களில், சில சங்கடங்களை சகித்துத் தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று கடைசி வரை வாதாடாதீர்கள்.
- குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல், இங்கே கேட்டதை, அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை, இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து, கர்வப்படாதீர்கள்.
- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய், ஆசைப்படாதீர்கள்.
- எல்லாரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
- அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துகளில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
- மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கிற நிகழ்ச்சிகளை தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.
- மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும், இனிய, இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- புன்முறுவல் காட்டவும், சில அன்பு சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சிலும், நடத்தையிலும், திமிர்த்தனத்தையும், தேவையில்லாத மிடுக்கு காட்டுவதைத் தவிர்த்து, அடக்கத்தையும், பண்பாட்டையும் கடைப்பிடியுங்கள்.
- பிணக்கு ஏற்படும்போது, அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல், நீங்களே பேச்சைத் துவங்க முன் வாருங்கள்.
- தேவையான இடங்களில் நன்றியையும், பாராட்டையும் சொல்ல மறக்காதீர்கள். பாராட்டுக்கு மயங்காத மனிதனே இல்லை; அதுவே, உங்களுக்கு வெற்றியாக அமையும்.

**('மனித உறவுகள் மேம்பட' என்ற நூலில்)**

# மீன்களின் உரையாடல்

மீன் தொட்டியில் தினந்தோறும் நான் காணும் ஒரு அற்புதம் இது: பெருந்தேவி மீன் தொட்டிக்கு அருகில் போனதுமே இரண்டு ஃப்ளோரான்களும் குதியாட்டம் போட்டுக் கொண்டு தொட்டியின் கண்ணாடியில் வாயை வைத்து அவளோடு பேசும். தொட்டியிலிருந்து மேலே எழும்பித் தரையில் விழுந்து விடுகிறாற்போல் மேலும் கீழும் குட்டிக் கரணம் போட்டுச் சுழன்று ஆடும். இதைப் பார்ப்பதற்காகவே மீன் வளர்ப்பில் உள்ள அத்தனை சிரமங்களையும் ஏற்றுக் கொள்ளலாம் என்று தோன்றும்.

பெருந்தேவியும், "என்னடா குட்டி, செல்லக் குட்டிக்கு பசிக்குதா, கொஞ்சம் கொஞ்சமா சாப்பிடுடா அஜ்ஜுக் குட்டி" என்று கொஞ்சிக் கொண்டே உணவைப் போடுவாள். இந்த மீன் உணவில் வேறு நூற்றுக்கணக்கான ரகங்கள் உள்ளன. ஃப்ளோரானின் கொண்டை பெரிதாக வளர வேண்டும் என்பதற்காக Humpy Head என்ற உணவைப் போட்டுக் கொண்டிருந்தாள் பெருந்தேவி.

பெருந்தேவி இல்லாமல் நான் எத்தனையோ முறை ஃப்ளோரான்களின் பக்கத்தில் போய் நின்று என்னென்னவோ வித்தையெல்லாம் காட்டுவேன். ம்ஹூம். பக்கத்தில் ஒரு ஆள் நிற்பதையே பொருட்படுத்தாமல் ஜடம் மாதிரி நீந்திக் கொண்டிருக்கும்.

இந்தக் குட்டிகளுக்காக உணவு டப்பாக்கள் - பதப்படுத்தப்பட்ட குட்டி மீனும் புழுக்களும்தான். மீன்களின் உணவு டப்பாவைத் திறந்தால் கருவாட்டு மணம் வரும் - வாங்கப் போகும் போது அந்த அக்வேரியத்தின் முதலாளி என்னிடம் சொல்லி ஆச்சரியப்பட்டார். அக்வேரியத்தில் உள்ள எந்த மீனும் அவர் அவற்றின் அருகே போனால் கண்டு கொள்வதில்லையாம். அவரிடம் வேலை பார்க்கும் பணியாள் சென்றால்தான் குதிக்கிறதாம். காரணம், பணியாள்தான் அவற்றுக்கு உணவு போடுகிறார்.

என் வீட்டில் செத்துப் போன மீன்களில் ஒன்று ரெட் பரட். அதன் மூக்கு கிளியைப் போல் இருப்பதால் அந்தப் பெயர். ரெட் பரட் ரொம்பவும் பயந்தாங்கொள்ளி என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அதேபோல் நான் அதன் பக்கம் போனாலே அதன் சிவப்பு நிறம் வெள்ளையாக மாறி விடும். பயத்தில் நிறமே மாறிவிடக் கூடிய அளவுக்கு நுண்ணுணர்வு கொண்டவை அவை.

ஒருமுறை பெருந்தேவி வெளியூர் போயிருந்தாள். அவள் வீட்டில் இல்லாத மூன்று தினங்களும் ஃப்ளோரான்கள் சாப்பிடவே இல்லை. மூன்று நாட்களும் இரண்டு வேளையும் உணவிட்டேன். ஆனால் ஃப்ளோரான்கள் அதைச் சீந்தவே இல்லை. சாப்பிட வைக்க எவ்வளவோ போராடினேன். காது, கண் என்று எல்லா உறுப்புகளும் செயல் இழந்து விட்டதுபோல் அவை என்னைக் கண்டு கொள்ளவே இல்லை.

மூன்று தினங்களும் அவை முழுப்பட்டினியாகக் கிடந்தன. செத்து விடும் என்று நினைத்தேன். சாகவில்லை. நான்காம் நாள் பெருந்தேவி வந்து பார்த்த போது இரண்டு ஃப்ளோரான்களும் அவளுடன் வாய் விட்டுப் பேசியதை நான் என்னுடைய இரண்டு கண்களாலும் பார்த்தேன். சத்தியம். நம்புங்கள். அந்த மீன்கள் நம்மைப் போல் பேசவில்லை. ஆனால் வாயைத் திறந்து திறந்து பேசின் துள்ளித் துள்ளிக் குதித்தன் ஆடின. ஆர்ப்பாட்டம் போட்டன; தொட்டியிலிருந்தே வெளியில் விழுந்து விடுவது போல் மேலே மேலே எம்பிக் குதித்தன. மேலே இருந்த திறப்பின் வழியே தண்ணீர் வெளியே தெறித்தது. அவள் உணவைப் போட்டதும் அவ் அவ் என்று விழுங்கின. தண்ணீர்த் தொட்டியில் வாயை வைத்து அவளைத் தொடுவதற்கு முயற்சி செய்தன. விட்டால் அவள் மடியில் விழுந்து விளையாடும் போல் தோன்றியது.




இது நடந்து சில தினங்கள் சென்று ஒருநாள் பெரிய ஃப்ளோரான் திடீரென்று தலைகீழாகக் கவிழ்ந்து கொண்டது. எப்போதும் மேல் நோக்கித் திமிறிக் கொண்டிருக்கும் திமிலைப் போன்ற அதன் கொண்டை தரை நோக்கிக் கிடந்தது. உணவு எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. இரண்டிலும் பொதுவாகச் சுறுசுறுப்பாக இருக்கும் ஃப்ளோரான் இதுதான். அக்வேரியம் ஆட்களை அழைத்து வந்து காண்பித்தோம். "வயதாகி விட்டது. செய்வதற்கு ஒன்றுமில்லை. அதன் ஆயுள் அவ்வளவுதான். அப்படியே சில நாட்கள் மிதந்து விட்டுச் செத்து விடும். நீங்களாக எதுவும் பண்ணாதீர்கள். சமயங்களில் இரண்டு மாதம்கூட உயிரோடு மிதக்கும்" என்றார்கள்.

பதினைந்து நாட்கள் தலைகீழாக மிதந்தது. சுவாசம் மட்டும் இருந்தது. எதுவுமே சாப்பிடவில்லை. ஒவ்வொரு நாளும் அது பிழைத்து விடும் என்ற நம்பிக்கையில் போய் பார்ப்பேன். ம்ஹூம். ஒரு மாற்றமும் இல்லாமல் சுவாசித்தபடி மிதந்து கொண்டிருக்கும்.

ஒருநாள் சுவாசம் நின்று மிதந்தது. எத்தனையோ ஜீவராசிகளைக் கொன்று தின்றிருக்கிறேன். ஆனால் அந்த ஃப்ளோரானின் மரணச் சம்பவம் என்னை மிகவும் அலைக்கழித்தது. உயிர் உடலை விட்டுப் பிரிவதற்குப் பதினைந்து நாட்களா ஆகும்? ஒவ்வொரு நாளும் பெருந்தேவி அதன் அருகே சென்று ஏதோ பேசுவாள்.


நட்சத்திரங்களின் குளிர்மை, காற்று, மண்ணின் மணம், மரம், மகரந்தத் துகள், கடல், வானம், எரிமலை, பிரபஞ்ச வெளி, மேகம், மலையின் தனிமை, புல்லாங்குழலின் இசை, குழந்தையின் முதல் குரல், மரணமடைந்தவனைத் தன்னுள் இழுத்துக் கொள்ளும் எரிதழல், சூரிய ரேகை, நீரோடையின் சலன சங்கீதம், மழை, பூரண நிலவு, பசுவின் குரல், தவளைச் சத்தம், எரிந்து தணிந்த வனம், ஆலம் விழுது, அரச இலை, உன்றைபனி, அகல்விளக்கு, மலர், தென்றல்...

இது எல்லாவற்றிலும் உன்னை நான் காண்கிறேன். என் இனிய ஃப்ளோரான் மீனே" உன் உயிர் எங்கே போனது? ஒளிப் புள்ளியாக மாறி எங்கே நின்றுகொண்டிருக்கிறாய்? அங்கிருந்து என்னைக் காண்கிறாயா?


**- சாரு நிவேதிதாவின் புதிய எக்ஸைல் நாவலில்**


# புதிர்ப்போட்டி இல. 19


♦1 தொடக்கம் 5 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள 5 உருவங்களுள் நான்கு உருவங்கள் ஏதாவதொரு வித்தில் ஒத்தவை வித்தியாசமான உருவத்தின் மீது கோடிடுக

1) 

2) 

3) 

4) 

5) 

♦ 06 தொடக்கம் 11 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

6) நபரொருவர் ஒரு வணிகத்தின் 60% ஆன பங்குகளை வைத்திருந்தார். அவர் தனது பங்குகளின் 40% ஐ ரூபா 6300 ஆகிய தொகைக்கு விற்றார். வணிகத்தின் மொத்தப் பெறுமானம் யாது? (------------------)


7) தொலைக்காட்சிப் பெட்டியொன்றை அதன் விலையின் 10% கழிவுடன் விற்கும்பொழுது பெற்றுக்கொள்ளும் தொகையிலும் பார்க்க அதை அதன் விலையின் 10% கூட்டி விற்கும் பொழுது ஒருவர் ரூபா 5000 ஆகிய தொகையைக் கூடுதலாகப் பெற்றுக்கொள்கிறார். தொலைக்காட்சிப் பெட்டியின் விலை யாது? (------------------)

8) ஒரு மனிதன் 30 நாள் கூலிவேலைக்கு அமர்த்தப்படுகிறார். 8 மணித்தியால வேலை நாளொன்றுக்கு ரூபா 110 படி பணம் செலுத்தப்படுமென அவருக்கு வாக்குறுதி அழிக்கப்படுகிறது. மாத காலத்தில் அவர் வேலைக்கு தாமதமாகச் செல்லும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ரூபா 10 கழிக்கப்படுமெனவும் அவருக்கு அறிவிக்கப்படுகின்றது. 4 ஞாயிற்றுக்கிழமைகள் அவர் வேலைக்குப் போகவில்லை. மாத முடிவில் அவர் சம்பளமாக ரூபா 2570 அகிய தொகையைப் பெற்றிருந்தாரெனின் அவர் வேலைக்குத் தாமதமாகச் சென்ற மணித்தியாலங்கள் எத்தனை? (------------------)

9) ஒரு புகையிரதம் A,B எனும் இரு புகையிரத நிலையங்களுக்கிடையிலான தூரத்தை 45 நிமிடங்களில் கடக்கின்றது. புகையிரதம் தனது கதியை மணித்தியாலம் ஒன்றுக்கு 5 km எனும் வீதத்தில் குறைத்துக் கொள்ளுமாயின் அது அத்தூரத்தைக் கடப்பதற்கு எடுக்கும் நேரம் 48 நிமிடங்களாகும். அப்புகையிரத நிலையங்களுக்கிடையிலான தூரம் யாது? (------------------)

10) கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தில் 9 தாயக்கட்டைகள் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் எதிர்ப்பக்கங்களில் காணப்படும் எண்களின் கூட்டுத்தொகை என்ன?

(.....................)



## அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

11) மணித்தியாலயத்திற்கு 10km வேகத்தில் செல்லும் ஒருவர் குறிப்பிட்ட இடத்தை அடைய பி.ப.1.00 மணியாகும். அதே தூரத்தை மணித்தியாலயத்திற்கும் 15km வேகத்தில் சென்றால் மு.ப 11.00 மணிக்கு சென்றடையலாம். நண்பகல் 12 மணிக்கு அவர் அவ்விடத்தை அடைய வேண்டுமாயின் எவ்வளவு வேகத்தில் செல்ல வேண்டும். (.......................)

♦ 12 தொடக்கம் 18 வரையுள்ள வினாக்களில் சொற்கள் அல்லது எண்கள் கோலம் ஒன் றிற்கமைய ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அல்லது எண் ணைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

12)சிகை,கைது,துவி .............................. திசை

(.............................)

13)குருதி, திருகு, குறவி ..............................

(.............................)

14) லாபம், பாரம், ராகம் ..............................

(.............................)

15) .காயம்,காரம்,காலம் ..............................

(.............................)

16) 14, 48, 89 ..............................16

(.............................)

17) 642, ..................... 372, 723, 685, 856

(.............................)

18) 132, 165 ..............................

(.............................)

♦19 தொடக்கம் 22 வரையுள்ள வினாக்களில் சொற்கள் அல்லது எண்கள்கோலம் ஒன்றிற்கமைய ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அல்லது எண்ணைப்புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

19) 1. நம்பிக்கை 2.விசுவாசம்
3. முயற்சி 4. பக்தி 3:மனவுறுதி
(.............................)

20) 1. வண்ணத்துப்பூச்சி 2. தேனீ
3. குளவி 4. எறும்பு 5. ஈ
(.............................)

21) 1. உத்தமமான 2. சிறந்த
3. மென்மையான 4. வன்மைமிக்க
5. மேம்பட்ட (.............................)

22).1. விபத்து 2. துக்கம்
3. கோபம் 4. அன்பு 5. மகிழ்ச்சி
(.............................)

♦23 தொடக்கம் 26 வரையான வினாக்களிலுள்ள எண்தொடர்கள் ஒழுங்கிலே அமைந்துள்ளன. அந்தந்தக்கோலத்திற்கமைய A,B,C ....... முதலிய எழுத்துக்கள் •இடப்பட்டுள்ள இடங்களில் வர வேண்டிய எண்ணைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

23) 1, 4, 9, A, 23 A - (.........................)

24) 5, 6, 9, 11, 14, B B - (.........................)

25) 1, 3, 7, 13,C C - (.........................)

26) 5, D. 25, 16, 152, 64 D - (.........................)

26)

| | | |
|---|---|---|
| 18 | 23 | 16 |
| E | 19 | F |
| 22 | G | 30 |

E - (.........................)
F - (.........................)
G - (.........................)

**இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.**

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- த.லவன்
தரம் :- 09
பாடசாலை:-யா/மத்தியகல்லூரி

பெயர் :- ம.கவிதா
தரம் :- 08
பாடசாலை:-யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

பெயர் :- கு.கிருஷாந்தன்
தரம் :- 09
பாடசாலை:-யா/இந்துக்கல்லூரி

பெயர் :- சி.சபிதா
தரம் :- 12
பாடசாலை:-யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

பெயர் :- றா.ஜனனிகா
தரம் :- 5
பாடசாலை:-யா/க.த.த.அ.கவித்தியாலயம்.

பெயர் :- நா.நர்மினி
தரம் :- 03
பாடசாலை:-யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்

பெயர் :- பி.ஜெனிள்ளன்
தரம் :- 03
பாடசாலை:- யா/கலைமகள் சர்வதேச பாடசாலை

பெயர் :- பி.ஒகஸ்ரின்
தரம் :- 06
பாடசாலை:- யா/ஸ்ரான்லிக்கல்லூரி.

பெயர் :- சி.சரூபன்
தரம் :- 06
பாடசாலை:- யா/மகாஜனக்கல்லூரி.

பெயர் :- கு.கிருஷாந்தன்
தரம் :- 09
பாடசாலை:- யா/இந்துக்கல்லூரி.

பெயர் :- சி.டிலக்ஷன்
தரம் :- 10
பாடசாலை:- யா/சத்தியசாயி பாடசாலை

### விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ------------------------------------
பாடசாலை :- ------------------------------------
கல்வி கற்கும் தரம் :- ----------------------------
வீட்டு முகவரி :- ------------------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------------

## சென்றவார விடைகள்

1.(II) 2.(II) 3.(I) 4. (II) 5. (I)
6.(II) 7.(II) 8.(II) 9. (I) 10.(II)
11.(I) 12.(III) 13.(II) 14.(III) 15.(I)
16.(IV) 17.(III) 18.(III) 19.(II) 20.(III)
21.(II)

# செங்கோலை உடைத்ததற்கு மன்னிப்பு கோர மாட்டேன்

## ஆக்ரோஷமாக தெரிவித்தார் சிவாஜிலிங்கம்



(யாழ்ப்பாணம்)

செங்கோல் தூக்கி எறிந்து உடைக்கப்பட்டதற்கு மன்னிப்பு கேட்கவும் முடியாது:கவலை தெரிவிக்கவும் முடியாது. இதற்கான திருத்தச் செலவை கூட செலுத்த முடியாது: எனது உறுப்பினர் உரிமைபறிக்கப்பட்டாலும், ஏன் எனது உயிரே பறிக்கப்பட்டாலும் மன்னிப்பு கோரமாட்டேன் என ஆக்ரோஷமாக தெரிவித்த சிவாஜிலிங்கத்தின் கருத்தையடுத்து அதன் திருத்த செலவை தானே பொறுப்பேற்பதாக தெரிவித்த அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் சிவாஜிலிங்கத்தின் இந்த அவமரியாதையான செயலுக்கு வருங்காலத்தில் இந்த நாட்டு மக்களே தீர்வினை தீர்மானிப்பார்கள் என தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வடமாகாணசபையின் அமர்வில் அவையின் எதிர்க்கட்சித்தலைவர். சி.தவராசாவினால் கோரப்பட்டசெங்கோல் உடைக்கப்பட்டமை தொடர்பான கவலையான செயலுக்கு உரிய உறுப்பினரைக தண்டிக்கும் வகையில் அவரை சபை அமர்வுகளில் குறிப பிட்ட காலத்திற்கு இடைநிறுத் தம் செய்'ய உத்தரவு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு அவைத் தலைவர் இவ்வாறு மழுப்பலான தீர்மானத்தை தெரிவித்து விட்டு அவையை ஒத்தி வைத்தார்.

ஜனநாயகத்தை பாதுகாக்கும் வகையிலும் உயரியசபையின் மரியாதையையும் மதிப்பையும் கௌரவத்தையும் பேணாத வகையில் சிவாஜிலிங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இச்செயலைக் கண்டிக்கும் விடயம் என ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் வாயால் பேசிவிட்டு மொத்தத்தில் அவைத்தலைவரின் தலையில் பொறித்துவிடவே அவ்வாறு சிவாஜிலிங்கத்திற்கு தண்டனை வழங்கினால் இந்த மாகாணசபையே இரண்டுபடும், வாக்கெடுப்பு நிகழும் என ஆளும் கட்சி உறுப்பினர் விந்தனின் கருத்தைத் தொடர்ந்து நானும் புலியுடன் இருந்தவன் தான் புதுப்புலி எனக்கு காட்ட வேண்டாம் 75 வயதிலும் நான் இங்கு இருக்கிறேன். எனக்கு இனப்படுகொலை. என்று சொல்ல பயம்இல்லை என காரசாரமாக அடுக்கிச் சென்ற அவைத்தலைவர் இறுதியில் அவையை ஒத்திவைத்தார்.(இ)

# வெள்ளப்பாதிப்பை குறைக்க வடிகால்கள் துப்புரவு

(யாழ்ப்பாணம்)

மழைகாரணமாக ஏற்படும் வெள்ளப்பாதிப்புக்களைக் குறைக்குமுகமாக யாழ். நகரின் முக்கிய வெள்ளநீர் வடிகால்கள் யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவப்பிரிவினரது. செயற்படுத்தலின் கீழ் துப்புரவு செய்யப்பட்டு புனரமைக்கப் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் முயற்சியின் காரணமாக கொட்டடி வீதி வெள்ள வடிகால், ஆரிய குளம், வைத்தியசாலை வீதி பெரியவடிகால் கன்னாதிட்டி வெள்ளவடிகால், றக்காறோட் வெள்ள நீர்வடிகால் உட்பட சுமார் ஐந்து வடிகால்கள் இவ்வாறு தூர்வாரப்பட்டு புனரமைக்கப்பட்டுவருவதாக ஈ.பி.டி.பி.யின் யாழ். நகர அமைப்பாளர் துரைராஜா இளங்கோ (றீகன்) தெரிவித்துள்ளார்.

அமைசசர் டக்ளஸ் தேவானந்தா யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவப். பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு மேற்கொண்ட முயற்சியினால் இந்த வடிகான்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(பா)

# புலோலி வடக்கில் திருடர்கள் தொல்லை

(பருத்தித்துறை)

புலோலி வடக்கு விஸ்வகுல ஒழுங்கையிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த திருடர்கள் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட போது வீட்டிலுள்ளவர்களின் கூக்குரல் சத்தத்தினால் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் பிளாற்றில் இருந்த 3 மின்குமிழ்களை கழற்றியபோது, சத்தம் கேட்டு விழித்த உரிமையாளர்கள் கூக்குரலிட்டதனால் திருடர்கள் தப்பியோடியுள்ளதாகவும் இது தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் மறுநாள் புதன்கிழமை இரவு அதேவீட்டின் வாசலில் மோட்டார் சைக்கிளுடன் திருடர்களின் நடமாட்டம் காணப்பட்டதாகவும் வீட்டிலுள்ளவர்கள் மின்குமிழை போட்டவுடன் திருடர்கள் மோட்டார் சைக்கிளுடன் தப்பியோடியதாகவும் தெரிவிப்படுகின்றது.

நகைக்கடை உரிமையாளரான தேவமனோகரன் என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதனால் அப்பகுதியிலுள்ள மக்கள் அச்சத்துடன் வாழ்வதாக தெரிவிக்கப்படுகிறது.

(18)



நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு வாழ்வின் எழுச்சி உதவிகள் வழங்குவதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பான சந்திப்பு அண்மையில் நல்லூர் பிரதேச சபையின் எதிரக கட்சியின் தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன் தலைமையில் பொற்பதி அலுவலகத்தில் இடம்பெற்றபோது....

# வாரம் ஒரு காரம்

## நீதியரசரால் கூட நியாயப்படுத்த முடியவில்லையா?...



அநியாயத்துக்கும் பல நியாயங்கள் முன்வைத்து அன்று வழக்காடிய வல்லுநர்களிற்குக்கூட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பக்கங்களை இன்று நியாயப்படுத்த முடியவில்லை. அன்று மேதினக் கூட்டத்தில் மேடையை விட்டு வெளியேறிய விக்னேஸ்வரன் இன்று கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பதில் சொல்ல முடியாமல் வெளியேறியுள்ளார்.

அதை நியாயப்படுத்த ஒரு நீதியரசர் சொன்ன பதில் இது தானாம் 'மாவட்டம் சார் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மாகாண நிதி ஏன் திரும்பியது எனும் வாதம் தேவையில்லையாம்

மாகாண நிதி தானே அந்த மாவட்ட அபிவிருத்திக்கு முக்கியமானது. வடமாகாண நிதி பயன்பாடற்று திரும்பியதால் அந்த மாகாணத்திற்கு கீழ் உள்ள கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி பாதிக்கப்படாதா?... இது என்ன நியாயம்?

மாகாணத்தின் கீழ் மாவட்டம் வரும்போது கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இது தானே முக்கிய பேசு பொருள். ஒரு நீதியரசர் கூறும் பதில் இது தானா?... சிறு பிள்ளைத்தன்மாக இருக்கிறதல்லவா ஒரு நீதியரசரின் நியாயம்.

அவரும் பாவம் எதைச் செய்வது?... எதைச் சொல்வது?... கம்பன் கழகத்துடன் இருந்து ஆன்மீகம் பேசிய மனிதனை ஐஸ்கிறீம் அரசியல்வாதிகள் மத்தியில் விட்டால் அந்த மனிதனும் என்ன செய்வது?... ஏதோ பேசித்தானே ஆகணும். அன்றிருந்த பட்டினத்தார் இன்றிருக்கும் விக்னேஸ்வரனிற்காகப் பாடிய பாட்டுப் போலிருக்கு இது

**நந்தவனத்தில் ஓர் ஆண்டி**
**நாலாறு மாதமாய் ஓர் குயவனை வேண்டி**
**கொண்டு வந்தாண்டி ஒரு தோண்டி**
**அதைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி**

நாலும் ஆறும் சேர்த்து மொத்தமாக பத்து மாதமாய் தவமிருந்து பெற்ற பெறுதற்கரிய இந்த மானிடப்பிறப்பை வாழத்தெரியாமல் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தானாம்!

அருமையான கல்வி, அதற்கேற்ப நீதியரசர் என்கின்ற பதவி, அழகான குடும்பம் நிறைந்த செல்வம், என்று எல்லாம் இருக்க அர்த்தமற்ற அரசியல் பக்கத்திற்கு ஆசைப்பட்டதன் விளைவினை இந்த விக்னேஸ்வரனிற்கு அழகாகப் பட்டினத்தார் 'கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி' என்று கூறியுள்ளார்.

இறுதியில் இவரிற்கும் ஐஸ்கிறீம் அரசியல்வாதிகளின் அந்தஸ்துதான் மிஞ்சப் போகின்றது.

பொதுவாக எமது வாழ்க்கையில் யதார்த்த பூர்வமான ஏற்புடமை என்றுமே உணர்வு பூர்வமான உச்சத்தைத் தொடுவதில்லை. காரணம் உணர்வுமயக் கற்பனையில் நாம் காணும் வாழ்வியல் சினிமா உட்பட்ட பாத்திர உருவகிப்பின் மூலம் உருப்பெற்றது.

இணக்க அரசியலை இழிவென்று கூறிய பலர், இலங்கையில் தமிழர்க்கு ஏது வழியென்று கூறினார்களா? இதுவரை இணக்க அரசியல் மூலம் பெற்ற அபிவிருத்தியை மக்கள் அனுபவிக்கவில்லையா? இதை இழிவென்று கருதிப் போரிட்ட மக்களிற்கு அழிவுகளைத் தவிர ஏதாவது மிஞ்சியதா?...

மாகாணசபை நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக மாகாணசபை வரவு செலவுத் திட்ட அறிக்கையில் தான் வாசிப்பதாகவும் அப்போது சில வேளைகளில் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இணைத் தலைமைப் பதவியில் இருக்க மாட்டார் என விக்னேஸ்வரன் கூறியிருக்கிறார். இந்த டக்ளஸ் தேவானந்தா அல்ல எத்தனை டக்ளஸ் தேவானந்தா வந்தாலும் இந்த டக்ளஸ் தேவானந்தாவின் வழியில் நின்றால் தான் இலங்கைத் தமிழர்க்கு அபிவிருத்தி தீர்வு.

தென்னிலங்கை அரசியல் மாற்றங்கள் எதுவாகவும் இருக்கலாம். இருக்கும் அரசுடன் இணக்க வழியில் சென்று மக்கள் சேவையை மையப்படுத்தும் சிந்தனை வாதிக்கு எந்த அரசியல் மாற்றம் வந்தாலும் ஏமாற்றமில்லை.

இப்படியெல்லாம் சிந்திக்கும் நீங்கள் இருக்கும் உங்கள் அரசியல் காலத்தில் மக்களிற்காக எதைச் செய்தீர்கள்? என்று சிந்தித்தால் தற்கொலையைத் தவிர எதுவுமே உங்களிற்கு மிஞ்சாது.

அரசியல் என்பது ஒரு வகை ஜீவ சேவை தான். மக்கள் சேவை மனதளவில் இருந்தால் அந்த அரசியல் வாதிக்கு நிலைப்பு நீடிக்கும் அந்த நீடிப்பின் உருவம் தான் டக்ளஸ் தேவானந்தா.

மக்களின் விருப்பம் எதுவோ அது நடக்கும். இதில் முதலமைச்சரோ அல்லது கூட்டமைப்போ குமுறுவதற்கு எந்தத் தராதரமும் இல்லை.

## பருவ மழையை அடுத்து பெருக்கெடுக்கும் பார்த்தீனியம்



(யாழ்ப்பாணம்)

பருவ மழையை அடுத்து யாழ்.மாவட்டத்தில் பார்த்தீனியம் அதீத வளர்ச்சியடைந்துள்ளதுடன் வயல் நிலங்களிலும் வீட்டு வளவுகளிலும் ஆக்கிரமித்து பூத்துக் குலுங்குகின்றது.

பார்த்தீனியத்தின் அதீத வளர்ச்சியால் மண்வளம் குன்றுவதோடு ஏனைய பயிர்களின் வளர்ச்சிக்கும் குந்தகம் ஏற்படுகிறது. அத்துடன் அதன் பூ, மகரந்தம், இலை மூலம் மனித சுக வாழ்வுக்கும் இடர் ஏற்படுவதோடு சுவாச நோய் ஏற்படலாம் எனவும் அஞ்சப்படுகின்றது.

# குடாநாட்டில் அதிகரித்துள்ள பதின்ம வயது துஷ்பிரயோகங்கள்

## பெற்றோரின் கவனக்குறைவே காரணமென தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில், வயது குறைந்த சிறுமியர் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்படும் சம்பவங்கள் திடீரென அதிகரித்துள்ளதாக, யாழ். போதனா மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இந்த ஆண்டில் கிட்டத்தட்ட 18 சம்பவங்கள் யாழ்.போதனா மருத்துவமனையில் பதிவாகியுள்ளதாகவும், இவற்றில் பெரும்பாலானவை கடந்த ஜூன், ஜூலை மாதங்களிலேயே இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து தகவல் வெளியிட்டுள்ள யாழ். போதனா மருத்துவமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர் குணராஜா நக்கீரன், இந்த ஆண்டில் 24 பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், இவற்றில் 18 வயதுக்கு குறைந்த சிறுமியர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவித்துள்ளார்.

ஏழு பதின்ம வயது கர்ப்பங்களும் இந்த ஆண்டில் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இந்தளவுக்கு வயது குறைந்த சிறுமிகள் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றிருக்கவில்லை. பாலியல் கல்வி குறித்த விழிப் புணர்வின்மையே இவற்றில் பெரும்பாலான சம்பவங்களுக்கு காரணம்.

பிள்ளைகளின் செயற்பாடுகள் தொடர்பான பெற்றோரின் கவனக்குறைவும் இதற்கு ஒரு காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இத்தகைய சம்பவங்களில் பெரும்பாலும் சந்தேகநபர்களாக இருப்பவர்கள், யாழ்ப்பாணத்தில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தான்.

பாதிக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் 12 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர்.

போருக்குப் பிந்திய சூழலில் வயதுகுறைந்த சிறுமியர் வல்லுறவுக்குட்படுத்தப்படுவது வழக்கமானது என்பது எமது ஆய்வில் உறுதியாகியுள்ளது.

அதேவேளை, வயது குறைந்த சிறுமியர் வல்லுறவுக்குள்ளாக்கப்படும் சம்பவங்கள் அதிகரிப்புக்கு உறவினர்களும் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய சம்பவங்களில் குடும்பங்களில் உள்ள வயதானவர்கள் (பேரன்) சந்தேக நபர்களாக உள்ளனர்.



யாழ்.மாவட்டத்தில் இத்தகைய சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன.

இவற்றைத் தவிர்க்க, ஆசிரியர்கள் ஊடாக மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் என்றும் குணராஜா நக்கீரன் மேலும் தெரிவித்துள்ளார்.

# மும்மொழி அமுலாக்கம் மகஜர் கையளிப்பு

(மன்னார்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் மும்மொழி அமுலாக்கல் தொடர்பான மனுகையளிப்பு நிகழ்வு, மன்னார் மாவட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்ட மொழிச்சங்கங்களின் ஒன்றியத்தால் மன்னார் நகரசபை மற்றும் மன்னார் பிரதேச சபை தலைவர்களுக்கு கடந்த புதன் கிழமை கையளிக்கப்பட்டது.

குறித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தங்கள் நிர்வாக பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் அரச, தனியார், பொது நிலையங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படும் வியாபார நிலையங்களுக்கு இடப்படும் பெயர்ப் பலகைகளில் மும்மொழிப் பயன்பாட்டை மேற்கொள்ள ஆலோசனை வழங்குமாறு, வேண்டுகோளொன்றை முன்வைக்கின்றோம்.

இவ் வேண்டுகோளானது அரசகரும மொழிகள் ஆணைக்குழு விதந்துரைத்துள்ள 1991 18ஆம் இலக்க சட்டத்தின் அரசியல் அமைப்பின் VI ஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளை மேற்கோள் காட்டியே முன்வைக்கப்படுகிறது என்பதை நாம் பிரகடனப்படுத்துகிறோம்.

அத்துடன் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் நிமிர்த்தம் தாங்கள் ஏற்படுத்தக்கூடிய துணை விதிகள் என்ற பிரமாணத்தில் எதிர்கால சமூகஒற்றுமை மற்றும் ஒன்றுபட்ட பல்லினத் தேசியம் என்பதற்கு வலுவூட்டும் தங்களுக்கு இவ் வேண்டுகோளை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதித் தேர்தலின் போது பொலிஸாரை கண்காணிக்க பொலிஸார்

(கொழும்பு)

பொலிஸாரின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு சிவில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது பொலிஸார் பக்கச்சார்பாக செயற்படுகின்றார்களா என்பதனை கண்காணிப்பதற்காக இவ்வாறு சிவில் உடையணிந்த பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.



பக்கச்சார்பாக செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு நாடு முழுவதிலும் விசேட பொலிஸ் பாதுகாப்புச் சேவையொன்று முன்னெடுக்கப்படுகின்றது. இரவு நேர ரோந்துப் பணிகள், மோட்டார் சைக்கிள் ரோந்து கண்காணிப்பு, திடீர் வீதிச் சோதனை எனப் பல்வேறு வழிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நாட்களில் நாடு முழுவதிலும் வீதிச் சோதனைச் சாவடிகளை அமைத்து பாதுகாப்பு கடமைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்

# ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன

(மன்னார்)

மன்னார் வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றி 2008 ஆம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதிக்குப் பின் (01-07-2008) ஓய்வுபெற்ற சகல ஆசிரியர்களினதும் விபரங்கள் திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான் தெரிவித்தார்.

குறித்த காலப் பகுதியில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களை ஆசிரியர் சேவை உள்ளீர்ப்பு தொடர்பாக விபரம் திரட்டுவதற்கு மன்னார் வலயக்கல்வி அலுவலக நிர்வாக கிளையில் விண்ணப்பத்தை பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மன்னார் வலயக்கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறும் சனி, ஞாயிறு தினங்களில் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான் மேலும் தெரிவித்தார்.



# கிடைத்தது விருது



ஜனநாயகத்திற்கான தாய்வான் மன்றத்தினால் வருடாந்தம் வழங்கப்படும் ஜனநாயகத்திற்கும் மனித உரிமைகளுக்குமான ஆசிய விருதை மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் இவ்வருடம் பெற்றுக் கொண்டது.

விருது வழங்கும் வைபவம் தாய்வான் ஜனாதிபதி மா யிங் ஜுவின் தலைமையில் அந்த நாட்டின் தலைநகராகிய தாய் பெய் நகரில் மனித உரிமைகளுக்கான சர்வதேச தினமாகிய டிசம்பர் 10 ஆம் திகதியன்று இடம்பெற்றது.

இவ்விருதை தாய்வான் ஜனாதிபதியிடமிருந்து மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் சார்பில் பணிப்பாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கே.எஸ். ரத்தினவேல் பெற்றுக் கொண்டார்.

இவ்விருதானது ஆசிய நாடுகளில் ஜனநாயகத்திற்கும் மனித உரிமைகளுக்குமான மேம்பாட்டிற்காக பாடுபடும் தனிநபர் அல்லது நிறுவனத்தை கௌரவிக்குமுகமாக வருடாந்தம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் சிபாரிசு செய்யப்பட்ட 13 நாடுகளில் இலங்கையின் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையமே இவ்விருதைப் பெற்றுக் கொண்டது.



**யாழ்ப்பாணம் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை கிழக்கு ஜே/403 கிராமசேவகர் பிரிவில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு கிராமசேவகர் தயாநிதி தலைமையில் சிப்பிக்குள் முத்து மாதர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட 2014 ஆம் ஆண்டுக்கான ஒளிவிழா நிகழ்வு வெகு விமரிசையாக இடம்பெற்றது.**

**இந்நிகழ்வில் பருத்தித்துறை உதவி பங்குத்தந்தை மற்றும் கிராம முன்னேற்ற சங்கத் தலைவர் வின்சன் டீபோல் அவர்களோடு சங்க அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்**

# க.பொ.த(சா/த) மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை

# G.C.E. (O/L) Examination model Paper

**கணிதம்**

ஆசிரியர் - சசீந்திரன்

1. ஒன்று ரூ 5.25 வீதம் 15 பென்சில்களைக் கொள்வனவு செய்ய செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு?

2. சுருக்குக. 82.3 - 15.63


3. தீர்க்க $2a - 4 = 18$

4. ஒருவர் ரூ200000 பெறுமதியுள்ள பொருள் ஒன்றை சமமான மாதத் தவணைக்கட்டணங்கள் 10இல் செலுத்தக்கூடியவாறு வாடகைக் கொள்வனவு முறையில் பெற்றுக்கொண்டார். வட்டியைக் கணக்கிடுவதற்கான மாத அலகுகளின் எண்ணிக்கையாது?


5. A,B எனும் இரண்டு நகரங்களுக்கிடையே உள்ள தூரம் 20 kmஆகும். 1:50000 அளவிடைக்கமைய வரையப்பட்டுள்ள ஒரு தேசப்படத்தில் இவ்விருநகரங்களையும் குறிக்கும் இரு புள்ளிகளுக்கிடையே உள்ள தூரம் எவ்வளவு?

6. பெருக்கல் விருத்தி ஒன்றின் முதலாம் உறுப்பு 4 உம் ஐந்தாம் உறுப்பு 324உம் ஆகும். இவ் விருத்தியின் பொது விகிதத்தைக் காண்க.

7. முக்கோணி ABC இன் பக்கங்கள் AB. AC ஆகியவற்றின் நடுப்புள்ளிகள், முறையே D உம் E உம் ஆகும். AD=AE=5cm. DE=8cm ஆகும். சரிவகம் BDEC இன் சுற்றளவைக் காண்க.





8. தரப்பட்டுள்ள வென்வரிப்படத்தில் காணப்படும் தகவல்களைப் பயன்படுத்தி தொடை XI அதன் மூலகங்களின் சார்பில் எழுதுக.




9. சுருக்குக.

$$\frac{x}{x-y} + \frac{y}{y-x}$$

10. உருவில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப y இன் பெறுமானத்தைக் காண்க.




11. 10%ஆண்டுப் பங்குலாபத்தைக் கொடுக்கும் கம்பனி ஒன்றின் ரூ 10 பங்குகளைரூ 15 வீதம் கொள்வனவு செய்வதற்கு ஒருவர் ரூ 45000 ஐ இடுகின்றார்.

i. அவர் கொள்வனவு செய்யத்தக்க பங்குகளின் எண்ணிக்கையாது?
ii. அப் பங்குகளின் பெயர்மாத்திரையான பெறுமானம் யாது?
iii. ஆண்டுக்கான பங்குலாபம் யாது?

12. $lga - lg3 = lg6 + lg5$ எனின் மடக்கைஅட்டவணைகளைப் பயன்படுத்தாமல் $a$ இன் பெறுமானத்தைக் காண்க.


13. $x$ ஒருநேர் நிறைஎண் எனில் சமனிலி $x + 3 \leq 6$ஐத் திருப்தியாக்கும் X இன் மூன்றுபெறுமானங்களைஎழுதுக.

14. ஒருவர் 12%ஆண்டுஎளியவட்டிக்கு ரூ 50000 ஐக் கடனாகப் பெறுகின்றார். 3ஆண்டுகளின் இறுதியில் கடனில் இருந்து விடுபடுவதற்குஅவர் கொடுக்க வேண்டியமொத்தப் பணத்தொகையைகாண்க.


15. ஒருபக்கத்தின் நீளம் X ஆனசதுரம்ஒன்றின் பரப்பளவு $X^2$ ஆகும். ஒரு பக்கத்தின் நீளம் 39cm ஆனசதுரம் ஒன்றினதும் ஒருபக்கத்தின் நீளம் 11cmஆனசதுரம் ஒன்றினதும் பரப்பளவுகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தைக் காரணிகளைப் பயன்படுத்திக் காண்க.

16. ஒரு பிரதேச சபை குறித்த ஒரு வீட்டுக்கு மதிப்பீட்டுவரியாக ஒருகாலாண்டுக்கு ரூபா 250 ஐ அறவிடுகின்றது. பிரதேசசபை வீட்டின் ஆண்டுப் பெறுமானத்தின் 5%ஐ மதிப்பீட்டு வரியாக அறவிடுகின்றதெனின் வீட்டின் ஆண்டுப் பெறுமானத்தைக் காண்க.


17. தரப்பட்டுள்ள வரிப்படத்தில் முக்கோணி QR உம் அதன் ஒருவெளி வட்டமும் காணப்படுகின்றன . PS=17 எனின் முக்கோணி PQR இன் சுற்றளவுயாது?





18. உருவில் காட்டப்படும் சதுரத்தின் உச்சிகளைமையமாகக் கொண்டு நான்குசமவட்டவிற்கள் வரையப்பட்டுள்ளன. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவைக் காண்க.




19. தரப்பட்டுள்ள உருவிலே OB ஐ ஆரையாகக் கொண்ட வட்டத்துக்கு B இல் வரையப்பட்டுள்ள தொடலி ABC ஆகும். D.Eஎன்பனவட்டத்தின் மீது உள்ள இரு புள்ளிகள் $O\hat{B}E = 50^0$ எனின் BDE இன் பெறுமானத்தைக் காண்க.




20. இங்குகாட்டப்பட்டுள்ள உருவிலே PQஎன்பது தெற்கில் இருந்துவடக்கிற்கு செல்லும் வீதியும் QR. PR என்பனபக்கவீதிகளும் ஆகும். P இல் இருந்து R இன் திசைகோள் 030°ஆகும். Q இல் இருந்து R இன் திசைகோள் யாது?




## பகுதி B

**எல்லாவினாக்களுக்கும் விடைஎழுதுக.**


01. குறித்ததொழிலாளர் ஒருவரின் தொடக்கஆண்டுச் சம்பளம் 4000 அமெரிக்கடொலராகும். அவருடையசம்பளம் ஆண்டுதோறும் 150 அமெரிக்கடொலர் வீதம் அதிகரிக்கின்றது.

i. தொழில் புரியும் எட்டாம் ஆண்டில் அவர் பெறும் ஆண்டுச் சம்பளம் எத்தனைஅமெரிக்கடொலராகும்.

ii. தொழில் புரியும் எட்டாம் ஆண்டின் இறுதியில் அவர் அத்தொழிலில் இருந்து சம்பளமாகப் பெற்றுள்ளமொத்தத் தொகைஎத்தனைஅமெரிக்க டொலராகும்.

iii. குறித்ததொழிலில் இருந்து 25 ஆண்டுகளில் அவர் ஓய்வுபெறும் போதுஅவர் அதுவரைபெற்றுக் கொண்டமொத்தசம்பளத் தொகையின் 10%ஆனதுபணிக்கொடையாகக் கிடைக்குமாயின் அவர் பெற்றுக் கொண்டபணிக்கொடைஎவ்வளவு.

02. ஒருபாடசாலையில் கற்கும் 1500 பிள்ளைகள் பற்றியதகவல்கள் வென்வரிப்படத்தில் காணப்படுகின்றன. அவர்களிடையே 1000 பிள்ளைகளின் வயது 20 இலும் குறைவாகும்.




i. வென்வரிப்படத்தில் நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தினால் வகைக் குறிக்கப்படும் பிள்ளைகளிகளின் கூட்டத்தைவிவரிக்க. அக்கூட்டத்தில் எத்தனை பிள்ளைகள் உள்ளனர்?

ii. 20 அல்லது 20 இலும் கூடியவயதுள்ளஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

iii. இந்த 1500 பிள்ளைகளில் இருந்து எழுமாற்றாக தெரிந்தெடுத்த ஒரு பிள்ளை 20 அல்லது 20 இலும் கூடியவயதுள்ள பெண் பிள்ளையாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

03. ஆண்டுதோறும் 8% பங்குலாபத்தைக் கொடுக்கும் விஷ்னு அன் கம்பனி என்னும் நிறுவனத்தின் ரூ 10 பங்குகளை ரூ 12 வீதம் கொள் வனவுசெய்யலாம்.

i. இக் கம்பனியின் ஒருபங்கின் பெயர் மாத்திரையானபெறுமானம் யாது?

ii. இக் கம்பனியின் ஒருபங்கின்சந்தைவிலையாது?

iii. இக் கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூ 72000 ஐ முதலீடு செய்யும் பிரம்மா கொள்வனவு செய்யத்தக்க பங்குகளின் எண்ணிக்கையாது?

iv. ஓர் ஆண்டின் இறுதியில் அவருக்குகிடைக்கும் வருமானம் யாது?

v. ஓர் ஆண்டின் இறுதியில் பங்குலாபத்தைப் பெற்றபின் அவர் அப் பங்குகளை ஒவ்வொன்றும் ரூ 15 வீதம் விற்பனைசெய்வாராயின் அவர் பெறும் மூலதன இலாபம் யாது?

04. சீமெந்துக்கலவை ஒன்றினைத் தயாரிப்பதற்கு 500 தாச்சிமணல், 300 தாச்சிகல், 200 தாச்சி சீமெந்து ஆகியன பயன்படுத்தப்படுகின்றன.

i. மணல், கல், சீமெந்துஆகியனகலக்கப்படும் விகிதத்தைப் பெறுக.

ii. 750 தாச்சிமணலுடன் கலக்கப்படத்தக்க சீமெந்தின் அளவைத் தருக.

iii. 6500 தாச்சி சீமெந்துக் கலவையைத் தயாரிப்பதற்கு தேவையானமணல், கல் சீமெந்து ஆகியவற்றின் அளவுகளைத் தனித்தனியாகக் காண்க.

iv. ஒருதாச்சி மணல் ரூ 10, ஒருதாச்சிகல் ரூ 8, ஒருதாச்சி சீமெந்து ரூ 5 எனின் மேற்படிசீமெந்துக் கலவைக்குஏற்படும் மொத்தசெலவினைக் காண்க.

05. ஒருகுறித்த மாதத்தின் போது ஒவ்வொரு வீட்டிலும் நுகரப்பட்டமின் அலகுகளின் எண்ணிக்கை பற்றிவீடமைப்புத் திட்டம் ஒன்றில் உள்ள 150 வீடுகளில் இருந்து பெறப்பட்டதகவலகளைக் கொண்ட அட்டவணை கீழே காணப்படுகின்றது.

| மின் | 71-80 | 81-90 | 91-100 | 101-110 | 111-120 | 121-130 | 131-140 |
|---|---|---|---|---|---|---|---|
| அலகுகளின் எண்ணிக்கை | | | | | | | |
| வீடுகளின் எண்ணிக்கை | 15 | 12 | 30 | 35 | 20 | 18 | 20 |

I மேற்குறித்தபரம்பலின் ஆகாரவகுப்புயாது?

II மேற்குறித்தபரம்பலின் இடையவகுப்புயாது?

III ஆகாரவகுப்பின் நடுப்பெறுமானத்தை எடுகோளாகக் கொண்ட இடையாகக் கொண்டுமேற்குறித்ததரவுக் கூட்டத்தின் இடைமின் அலகுஎண்ணிக்கையைக் காண்க. விடையினைகிட்டிய முழு எண்ணுக்குமட்டந்தட்டுக.

IV ஒருமின் அலகுக்கு ரூ 3 அறவிடப்படும் எனின் ஒருவீட்டின் இடைமின் கட்டணத்தினைக் காண்க.

V 1 தொடக்கம் 50 வரையுள்ளமின் அலகுகளுக்குஅலகுக்கு ரூபா $y$வீதமும், 50 தொடக்கம் 100 வரையுள்ளமின் அலகுகளுக்குஅலகுக்கு ரூபா$2y$ வீதமும் 100 இற்குமேற்பட்டஅலகுகளுக்கு ரூபா$3y$ வீதமும் கட்டணத்தை அறவிடுவதற்குமின் கம்பனி உத்தேசித்துள்ளது. மாதநிலையானமின் கட்டணம் ரூ$A$ஆகும். இதற்கேற்பமேலே (iii) இல் நீர் பெற்ற இடைமின் அலகுஎண்ணிக்கையைப் பயன்படுத்திஒருவீட்டின் இடைமின் கட்டணத்துக்கானஅட்சரகணிதக் கோவையைஎழுதுக.

VI $y$=ரூ3.00, $A$=ரூ100 எனின் இவ் வீட்டின் மாத இடைமின் கட்டணத்தைக் காண்க.

6. i. காரணிப்படுத்துக $x^2-2x-2y$

ii. செவ்வகவடிவ விளையாட்டு மைதானம் ஒன்றின் நீளம் அதன் அகலத்தைக் காட்டிலும் 15m கூடியதாகும். விளையாட்டுமைதானத்தின் பரப்பளவு $2700m^2$ ஆகும்.

a. விளையாட்டுமைதானத்தின் அகலத்தை $A$ மீற்றராகக் கொண்டுஅதன் பரப்பளவைக் காட்டும் இருபடிச் சமன்பாட்டைஉருவாக்குக.

b. மேற்குறித்தசமன்பாட்டைதீர்த்துவிளையாட்டுமைதானத்தின் நீளத்தையும் அகலத்தையும் காண்க.

7. மாணவன் ஒருவன் முதலாம் மாதத்தில் ரூ 20, இரண்டாம் மாதத்தில் ரூபா 25, மூன்றாம் மாதத்தில் ரூ 30 என்றவாறுபணத்தைசேமித்தான்.

i. அவ் எண்களின் மூலம் வகைக் குறிக்கப்படும் விருத்தியாது?

ii. இவ் விருத்தியில் 25 ஆம் உறுப்புயாது?

iii. இரண்டுவருடங்களின் இறுதியில் அவனதுகையில் உள்ளமொத்தப் பணம் யாது?

iv. மாணவன் சேமிக்கும் மொத்தத் தொகைஎத்தனைமாதங்களுக்குப் பின்னர் ரூ 825 ஆக இருக்கும்.

8. பெருக்கல் விருத்திஒன்றின் முதல் உறுப்பு 5 உம் பொதுவிகிதம் 3உம் ஆகும்.

i. விருத்தியின் 5ஆம் உறுப்புயாது?

ii. விருத்தியின் 10 ஆம் உறுப்புயாது?


iii. விருத்தியின் 8உறுப்புக்களின் கூட்டுத் தொகையாது?

iv. விருத்தியின் 10உறுப்புக்களின் கூட்டுத்தொகையாது?

9. i. முக்கோணிஒன்றினுடைய இரு பக்கங்களின் நடுப்புள்ளிகளை இணைக்கும் கோடு மூன்றாவதுபக்கத்திற்குச்சமாந்தரமாகவும் அதன் நீளம் மூன்றாம் பக்கத்தின் அரைவாசிக்குச் சமமாகவும் இருக்குமெனநிறுவுக.

ii. முக்கோணி PQR இல் QR, RP, PQஆகியபக்கங்களின் நடுப்புள்ளிகள் முறையே L,M,N ஆகும் QLMN ஓர் இணைகரமெனநிறுவுக.

10. i. பரப்பளவு$616cm^2$ஆனவட்டம் ஒன்றுஉருவிலேகாட்டப்பட டுள்ளவாறுசதுரம் ஒன்றில் உள் வரையப்பட்டுள்ளது. சதுரத்தின் பரப்பளவைக் காண்க.



ii சுருக்குக. $(9)^{3/2}\times 8^{1/3}$

iii. தீர்க்க $\frac{y}{3}+\frac{5}{2}=5$

iv. காரணிப்படுத்துக. $x^2+3x-3-x$

11. ஒருவர் வங்கியில் இருந்து ரூ 60000 கடன் பெற்றார். அதற்காக வங்கி 10%ஆண்டுவட்டியினைஅறவிடுகின்றது. அதேவேளைமுதலையும் வட்டியையும் 15 சமமாதத் தவணைக் கட்டணங்களில் கொடுத்துமுடித்தல் வேண்டும்.

i. ஒருமாதம் கொடுக்கவேண்டியமுதலின்பகுதிஎவ்வளவு?

ii. அத் தொகைக்காகஒருமாதம் கொடுக்கவேண்டியவட்டிஎவ்வளவு?

iii. வட்டிகொடுக்கப்படவேண்டியமாதஅலகுகளின் எண்ணிக்கையாது?

iv. கொடுக்கப்படவேண்டியமொத்தவட்டியாது?

v. திரும்பக் கொடுக்கவேண்டியமொத்தத் தொகையாது?

vi. ஒருதவணைக் கட்டணத்திற்காகக் கொடுக்கவேண்டியதொகையாது?

பகுதி C

ஐந்துவினாக்களுக்குமாத்திரம் விடைஎழுதுக.

12. ஒருவர் ஆண்டுக்கு 12%வட்டிக்கு ரூ 150 000 ஐ வங்கிஒன்றில் இட்டுநிலையானவைப்புக் கணக்கைஆரம்பித்தார். அவர் ஆண்டுதோறும் இக் கணக்கைச் சுயமாகப் புதுப்பிப்பதற்கு வங்கியுடன் உடன்படிக்கை செய்து கொண்டார்.

i. முதலாம் ஆண்டின் இறுதியில் அவருக்குகிடைக்கும் வட்டியாது?

ii. இரண்டாம் ஆண்டின் தொடக்கத்தில் அவருடையமுதல் யாதாக இருக்கும்.

iii. அவர் மூன்றாம் ஆண்டின் இறுதியில் தனதுநிலையானவைப்புக் கணக்கை மூடுவாராயின் அவருக்குகிடைக்கும் மொத்தப் பணம் யாது?

13. சார்பு$y=-2x^2+4$ இன் வரைபைவரையப் பொருத்தமான x.y ஆகியவற்றின் பெறுமானங்களைக் கொண்டபூரணமற்ற அட்டவணை கீழேதரப்பட்டுள்ளது.

| x | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|
| y | -14 | | 2 | | | | 2 |


i. மேலேஉள்ளஅட்டவணையில் வெற்றிடங்களைநிரப்புக.

ii. தரப்பட்டுள்ளவரைபுத்தாளில் X அச்சுவழியே 10 சிறுசதுரங்களினால் ஓர் அலகையும் ல அச்சுவழியே 10 சிறுசதுரங்களினால் இரு அலகுகளையும் குறிக்குமாறுஅளவிடையைஎடுத்துஅச் சார்பின் வரைபைவரைக.

iii. வரைபின் உச்சியின் ஆள்கூறு யாது?

iv. வரைபின் சமச்சீர் அச்சின் சமன்பாடுயாது?


14. i. ABஐயும் ADஐயும் விட்டங்களாகக் கொண்டு வரையப்பட்ட இரு சமவட்டங்கள் உருவிலே காட்டப்பட்டுள்ளன. இவ்விருவட்டங்களும் A இலும் C இலும் இடைவெட்டுகின்றன.




a. BCD ஒரு நேர்கோடு என நிறுவுக.

b. BC = CD எனநிறுவுக.

15. தரப்பட்டுள்ள உருவிலே $\Delta ABC$ இனுள்ளே யாதாயினும் ஒரு புள்ளி O ஆகும். P,Q,R என்பன முறையே OA, OB,OC என்பவற்றின் நடுப்புள்ளிகள் ஆகும்.




a. PQ//ABஎனநிறுவுக.

16. i. நேர்விளிம்பு, கவராயம், cm/mmஅளவுச்சட்டம் (அளவுகோல்) ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக் கோடுகள் யாவற்றையும் தெளிவாகக் காட்டி AB ஆனதுDC இற்கு சமாந்தரமாகவும் AB=8.5cm, AD=6.5cm, CD=4.5 cm, $B\hat{A}D=60^{\circ}$ ஆகவுள்ள நாற்பக்கல் ABCD ஐ அமைக்க. அமைப்பைத் தொடங்கு முன்னர் நாற்பக்கல் ABCD இன் பருமட்டானபடத்தை வரைந்து அதிலே தரவுகளைக் குறிக்க.

ii. B,C,D ஆகியபுள்ளிகளுக்குஊடாகச் செல்கின்றவட்டத்தைஅமைக்க.

iii. AB, AD ஆகியவற்றில் இருந்து சமதூரத்தில் இருக்கின்றபுள்ளியின் ஒழுக்கை வரைக.

iv. மேலே (ii) இலுள்ளவட்டமும் (iii) இலுள்ளஒழுக்கும் E,G ஆகிய புள்ளிகளிற் சந்திப்பின் EG இன் நீளத்தைஅளந்துஎழுதுக.

17. குடும்பம் ஒன்றில் பிறக்கும் பிள்ளையொன்று ஒன்றில் ஆண் பிள்ளையாக அல்லது பெண் பிள்ளையாக இருப்பது சமதகவானது எனக் கருதி மூன்று பிள்ளைகள் மாத்திரம் பிறந்துள்ள குடும்பம் ஒன்றுக்குப் பொருத்தமான மாதிரி வெளியை எடுத்துக் காட்டுவதற்கு மரவரிப்படம் ஒன்றுவரைக.


i. மூன்றுபிள்ளைகளும் ஆண் பிள்ளையாக இருப்பதற்கானநிகழ்தகவுயாது?

ii. மூன்றுபிள்ளைகளும் பெண் பிள்ளையாக இருப்பதற்கானநிகழ்தகவுயாது?

iii. இரு பிள்ளைகள் பெண் பிள்ளைகளாகவும் மற்றையதுஆண் பிள்ளையாகவும் இருப்பதற்கானநிகழ்தகவைகாண்க.

iv. இந்தஆய்வானது மூன்றுபிள்ளைகள் மாத்திரம் உள்ள 300 குடும்பங்களைக் கொண்டமாதிரிஒன்றுடன் செய்யப்பட்டால் எத்தனைகுடும்பங்களில் இரண்டாவதுபிள்ளைபெண்பிள்ளையாக இருக்கும் எனஎதிர்பார்க்கலாம்.

18. ஒருபெரியஅரைவட்டத்தின் விட்டத்தின் மீது ஒவ்வொன்றும் 14cm ஆரை உள்ள இரண்டு அரைவட்டங்கள் இருக்குமாறு உரு வரையப்பட்டுள்ளது.




a. இவ் உருவின் சுற்றளவுயாது?

b. இவ் உருவின் பரப்பளவுயாது?

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1).3 | (2).3 | (3).1 | (4).2 | (5).2 | (6).3 | (7).2 | (8).1 |
| (9).3 | (10).2 | (11).1 | (12).2 | (13).1 | (14).3 | (15).1 | (16).1 |
| (17).2 | (18).1 | (19).3 | (20).1 | (21).3 | (22).x | (23). 7 | (24).1 |
| (25).2 | (26).3 | (27).2 | (28). 1 | (29).3 | (30).1 | (31).3 | (32).3 |
| (33).21 | (34).3 | (35).1 | (36).3 | (37).1 | (38).4 | (39).1 | |

# வடமாகாண சபையின் பட்ஜட் 17 இல் சமர்ப்பிக்கப்படவுள்ளது


வடமாகாண சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி அவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. ஏற்கனவே வடமாகாண முதலமைச்சரினால் 2015 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்று மாகாண சபைச் சட்டத்திற்கமைய நிதியாண்டு ஆரம்பமாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் அவையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதற்கு ஏற்ப கடந்த 4 ஆம் திகதி மாகாண சபை செலவீனங்களுக்கு நிதி ஆணைக குழுவினால் தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு சிபார்சு செய்யப்பட்ட ஒதுக்கீடு பற்றிய சுருக்கமான நிதிக்கூற்று சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும் வரவு செலவுத் திட்டத்தின் விரிவான ஒதுக்கீடு நியதிச் சட்டம் 17 ஆம் திகதி அவையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு விடப்படவுள்ளது.

இது தொடர்பில் வடமாகாண சபையின் அமர்வு 3 தினங்களுக்கு இடம்பெறும் என நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மக்களின் ஸ்திரமற்ற தீர்மானங்களால் பின்தள்ளப்பட்டுள்ளது வாழ்க்கைத்தரம்

## நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மக்கள் அவ்வப்போது எடுக்கின்ற அரசியல் தீர்மானங்களின் ஸ்திரமற்ற நிலைமைகள் மீளவும் மக்களின் வாழ்நிலையைப் பின்தள்ளி விடுகின்றன அத்தோடு ஒட்டுமொத்த சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் அது தடையாக அமைகின்றது. எனவே மக்கள் தமது முன்னேற்றம் தொடர்பாக தெளிவான தீர்மானங்களை எட்டவேண்டும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

உடுவில் பிரதேசத்தில் மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பயனாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட விசேட நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் யாழ்.மாவட்டம் சுமார் 335 மில்லியன் ரூபாவை பெற்றுள்ளது. அந்நிதியினூடாக கிராமங்களின் உட்கட்டுமானங்கள் மற்றும் மக்களின வாழ்வாதார செயற்பாடுகளை மேம்படுத்துவதே எமது நோக்கு. யுத்தத்திற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டதுரித அபிவிருத்தி நடவடிக்கையின் விளைவாக எமது பிரதேசங்களின் உட்கட்டுமானங்கள் குறிப்பிடத்தக்க மேம்பாட்டை எட்டியுள்ளது. ஆனால் மக்களுக்கான நிரந்தர வருமான மார்க்கங்கள் இன்னும் நிறைவாக உருவாக்கப்படவில்லை.

இதனால் கிராமப்புறங்களில் வாழும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரத்தைப் பெறுவதில் நாளாந்தம் பல நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

நாளாந்தம் மக்களின் மேம்பாட்டுக்காகவே பணியாற்றிக்கொண்டிருப்பதால் மக்களின் தேவைகளை நாம் ஒவ்வொன்றாக பார்த்துப் பார்த்து நிறைவேற்றி வருகின்றோம். இருப்பினும் மக்கள் அவ்வப்போது எடுக்கின்ற அரசியல் தீர்மானங்களின் ஸ்திரமற்ற நிலைமைகள் மீளவும் மக்களின் வாழ்நிலையைப் பின்தள்ளி விடுகின்றன அத்தோடு ஒட்டுமொத்த சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் அது தடையாக அமைகின்றது எனவே மக்கள் தமது முன்னேற்றம் தொடர்பாக தெளிவான தீர்மானங்களை எட்டவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உடுவில் பிரதேச செயலர் நந்தகோபனின் தலைமையில் பிரதேச செயலகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் வலி. தெற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவர் அரிகரன் மற்றும் வலி.தெற்கு பிரதேசசபை உறுப்பினர் இராஜசேகரம் பிரதேச செயலகத்தின் பிரதித்திட்டப் பணிப்பாளர், பிரதேச கால் நடை வைத்திய அதிகாரி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கிராம சேவையாளர்கள் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பயனாளிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீ சாரதா தேவியின் 162 ஆவது ஜெயந்தி விழா

யாழ். இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி சங்கத்தின் அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 162 ஆவது ஜெயந்தி விழா இன்று சனிக்கிழமை பி.ப 4. மணிக்கு மருதனார் மடத்திலுள்ள நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தலைவர் திருமதி ஸ்ரீகலா ஜெகநாதன் கலந்து கொண்டு அன்னை பெண்களுக்கு ஓர் கலங்கரை விளக்கு என்னும் பொருளில் உரையாற்றவுள்ளார்.

தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# சுதேச மருத்துவ திணைக்களத்தால் காலாண்டு சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் சுதேச மருத்துவம் தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் காலாண்டிற்கு ஒருமுறை சுதேச மருத்துவம் சார் விடயங்கள் அடங்கிய சஞ்சிகை வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சஞ்சிகைக்கான ஆக்கங்கள் துறைசார் வைத்தியர்கள் மற்றும் அறிஞர்கள், சித்த மருத்துவபீட மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களிடமிருந்து கோருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள், மாணவர்கள் முதல் துறைசார் நிபுணர்கள் வரை பயன்பெறும் விதமாக பின்வரும் விடயப் பரப்பு தொடர்பான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. சுதேசு மருத்துவத் துறை வைத்தியர்கள், வைத்தியசாலைகள் வடமாகாணம் மற்றும் தேசிய ரீதியில் மக்களுக்கு ஆற்றிவரும் பங்களிப்பினை வெளிக்காட்டும் கட்டுரைகள், சுதேச மருத்துவம், மருத்துவ பயன்பாடு, விசேட சிகிச்சை முறைகள், மூலிகைகள், அவற்றின் பயன்பாடு தொடர்பான விடயங்கள் ஆகியன,

பின்வரும் வரைமுறைகளுக்கு அமைவாக ஆக்கங்களின் மென்பிரதி மற்றும் வன்பிரதிகளை முதலாம் காலாண்டுக்குரிய விடயங்களை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னரும், இரண்டாம் காலாண்டுக்குரியவற்றை ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்னரும், மூன்றாம் காலாண்டுக்குரியவற்றை யூலை 31ஆம் திகதிக்கு முன்னரும் நான்காம் காலாண்டுக்குரியவற்றை ஒக்ரோபர் 30ஆம் திகதிக்கு முன்னரும் கிடைக்கக் கூடியதாக திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

கணினி தட்டச்சில் A4 தாளில், Font size 12, Font தமிழ் போட்டி தொடர்பான இறுதி முடிவுகளை சஞ்சிகையின் ஆக்கக் குழுவே தீர்மானிக்கும்.

ஆக்கங்களை மாகாண ஆணையாளர், மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், வடமாகாணம் சுகாதார கிராமம், பண்ணை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சஞ்சிகை ஆக்கம் என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். அல்லது ayurvedanp @ yahoo. com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம் என திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி சி. துரைரட்ணம் அறிவித்துள்ளார்.

# நாவலர் குருபூசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கலாமன்றத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவு சிறப்புக்கவிதை மற்றும் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களது நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன


# தமிழையும் சைவத்தையும் வளர்த்த போற்றுதற்குரியவர் நாவலர்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவ பெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சைவ சமயத்தையும் தித்திக்கும் இனிய தேன் போன்ற தமிழ்மொழியையும் தமது இரண்டு கண்களெனப் போற்றி வளர்த்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானவார்.

நாம் இன்று நெற்றியில் திருநீறு துலங்க சைவர்கள் என்று சொல்லிக் கொண்டு தலைநிமிர்ந்து வாழ்கின்றோம் என்றால் அதற்கு வித்திட்டவர் நாவலர் பெருமானே.

ஈழமணித் திருநாட்டில் சைவ சமயம் நன்கு வேரூன்றி வளர உண்மையாகப் பாடுபட்டவர் நாவலரே சமய தீட்சை பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் நம்மவர்களுக்கு எடுத்துரைத்த நாவலர் கதாப்பிரசங்கம் மூலம் சைவசமய உண்மைகளையும் கோட்பாடுகளையும் விளக்கி எல்லோருக்கும் அதைப்பற்றிய விரிவான தத்துவார்த்தமான உண்மைக் கருத்துக்களை எடுத்துக் கூறி அளப்பரிய சேவையாற்றினார்.

நாவலர் செய்துள்ள அறப் பணிகளுள் காலத்துக்கு ஏற்ற வகையில் தமிழ் உரைநடையை வளர்ப்பதற்கு அவர் கையாண்ட வழிவகைகள் பாராட்டுக்குரியவை. நாவலரது நாவன்மையைக் கண்ட திருவாவடுதுறை ஆதீனம் தான் அவருக்கு நாவலர் என்ற பட்டத்தை வழங்கியது.



அவரது தமிழ்மொழிச் சேவையினால் தற்கால உரைநடையின் தந்தை என்றும் வசன நடை கைவந்த வல்லாளர் என்றும் பெயர்கள் அவருக்கு கிடைத்தன. நாவலர் செய்த அரும் பணிகள் மூலம் நமது ஈழவள நாட்டில் கல்வியும் சமயப்பண்பாடும் சமய தீட்சை மூலம் ஒழுக்கமும் வளர்ச்சியுற்றன என்று கூறினால் மிகையாகாது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே 1822 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதிகளுக்கு மகனாக திருவவதாரம் செய்தார்.

ஆறுமுகநாவலர் சமயப்பணியும் சமுதாயப் பணியும் அஞ்சாமை, வீரம், நேர்மை, உண்மையான உழைப்பு, ஒழுக்கம், கல்வி, அறிவு ஆகிய உள்ளார்ந்த உயர்ந்த பண்புகளை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தன.

மேலும் நாவலர் பெருமான் இந்துமதம் பற்றிப் பேசவில்லை என்றும் சைவக்கோட்பாடுகளையே பெரிதும் வலியுறுத்தினார் என்றும் கூறப்படுகின்றது. தமது சைவ வினாவிடையிலே சைவ சமயத்தின் அருமை பெருமைகளை அழகாக எடுத்துக்கூறியுள்ள போதிலும் அதனை உணராமல் வேறு மதத்துக்கு மாறுகின்றார்களே என்று மிகவும் வேதனையுடன் அவர் காணப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. எனினும் நாவலரின் அடிப்படை நோக்கம் சைவம் வளர வேண்டும் கல்வி வளரவேண்டும் மக்கள் சைவமுறைப்படி வாழ்தல் வேண்டும் என்பதேயாகும்.

ஆறுமுகநாவலரின் குருபூசைத்தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டுள்ள நிலையில் இன்றைய தினம் பல்வேறு இடங்களிலும் குருபூசைத்தினம் அனுஷ்டிக்கப்படுவதுடன் நாவலர் விழாக்களும் நடைபெறுகின்றன.

உண்மையில் நாவலர் இல்லாவிட்டால் நாம் இன்று சைவர்களாக நடமாட முடியாது போயிருக்கும். அவருடைய திருவடிகளை வணங்கி வாழ்த்தி சிந்தித்திருப்போமாக.

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

# தற்கொலைப்படைத்தாக்குதல்
# நைஜீரியாவில் 40 பேர் பலி

நைஜீரியாவில் பெண் தீவிரவாதிகள் இருவர் நடாத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் 40 பேர் பலியாகியுள்ளனர்.

நைஜீரியாவின் கானோ (Kano) நகரச் சந்தைக்குள் கடந்த புதன்கிழமை புகுந்து இரண்டு பெண்கள் நடாத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் 40 பேர் பலியாகியுள்ளனர், மேலும் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.



இதுகுறித்து பொலிஸார் கூறுகையில், கானோ நகரின் காந்தின் குவாரி சந்தைக்கு பாரம்பரிய உடையணிந்து வந்த இரு இளம் பெண்கள் தங்கள் உடலில மறைத்து வைத்திருந்த வெடி குண்டுகளை வெடிக்கச் செய்துள்ளனர் இந்த தாக்குதலின் பின்னணியில், "போகோ ஹராம் தீவிரவாத அமைப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக பெண்களைக் கொண்டு போகோ ஹராம் தீவிரவாதிகள் தற்கொலைப் படை தாக்குதல்கள் நிகழ்த்தி வருவது குறிப்பிடத் தக்கது.

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நாடகமாடுகிறார் ஜெயலலிதா
## விஜயகாந்த் குற்றச்சாட்டு

இலங்கையில், தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட, ஐந்து மீனவர்கள் விடுதலை பிரச்சினையில், அரசியல் ஆதாயத்திற்காக, மத்திய அரசை குறை கூறி, ஜெயலலிதா நாடகமாடுகிறார், என, தே.மு.தி.க., தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார்.



இது தொடர்பான, அவரது அறிக்கையில் கூறியதாவது இலங்கை அரசால் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட, ஐந்து தமிழக மீனவர்களை மீட்டு வந்தது குறித்து, நாடாளுமன்றில் அ.தி.மு.க.,வை சேர்ந்த துணை சபாநாயகர் தம்பித்துரை பேசினார். அப்போது, இலங்கை அரசு நடத்திய நாடகத்திற்கு, இந்திய அரசும், துணை போய் உள்ளதாக, கடுமையான குற்றச்சாட்டை கூறியுளளார். இந்தக் கருத்தை, அவருடைய சொந்த கருத்தாக கருத முடியாது. அ.தி.மு.க., பொதுச் செயலர் ஜெயலலிதாவின் கருத்தாகத் தான், எடுத்துக் கொள்ள வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினையில், பல ஆண்டுகளாக நாடகமாடுவதும், இரட்டை வேடம் போடுவதும், ஜெயலலிதா தான் என்பதை, நாடே அறியும்.

இலங்கைப் பிரச்சினையில், அரசியல் ஆதாயத்திற்காகவும், நாடகமாடுபவர் ஜெயலலிதா தான். அப்படி இருக்கையில், மத்திய அரசை குறை சொல்வதற்கு, எவ்வித தகுதியும் அவருக்கு இல்லை. தமிழக மீனவர்கள் ஐந்து பேரும், நல்லபடியாக தாயகம் திரும்பி உள்ளார்களே என, மகிழ்ச்சியுடன் உள்ள இந்த நேரத்தில், இதிலும் அரசியல் ஆதாயம் தேடும் ஜெயலலிதாவின் நாடகத்தை பார்த்து, தமிழக மக்கள் எள்ளி நகையாடுகின்றனர்.

இனியும், இதுபோன்ற நாடகங்களை அரங்கேற்றாமல், தமிழக மக்களின் வளர்ச்சிக்காக சிந்தித்து செயறபட வேண்டும். இவ்வாறு, விஜயகாந்த் கூறியுள்ளார்.

# 2014 இன் சிறந்த மனிதர்கள் எபோலா மருத்துவர்கள்




எபோலா நோய் சிகிச்சையில் ஈடுபட்டு வரும் மருத்துவர்களை இந்த ஆண்டின் சிறந்த மனிதர்களாக அமெரிக்காவின் பிரபல டைம் வார இதழின் ஆசிரியர் குழு அறிவித்துள்ளது.

ஓராண்டு காலத்தில், உலக அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் மனிதரை ஆண்டின், சிறந்த மனிதராக டைம் பத்திரிகை தேர்ந்தெடுத்து அறிவித்து வருகிறது. 1927-ஆம் ஆண்டு முதல் இவ்வாறு அறிவிக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டின் சிறந்த மனிதராக தனியொரு நபரைத் தேர்ந்தெடுக்காமல், எபோலா நோய் சிகிச்சையில் ஈடுபட்டுள்ள மருத்துவர்களின் புகைப்படங்களைத் தங்களது வார இதழ் அட்டையில் இடம்பெறச் செய்துள்ளது டைம் பத்திரிகை.

ஆண்டின் சிறந்த மனிதர் என்ற ஒரே செய்தி தொடர்பாக டிசம்பர் 22 திகதியிடப்பட்ட இதழுக்கு 5 விதமான அட்டைப் படங்களை வடிவமைத்து டைம் பத்திரிகை புதுமை படைத்துள்ளது.

இந்நோய்க்கு எதிராக ஆயிரக்கணக்கானவர்கள் போராடி வரும் நிலையில், சிலரின் படங்களையாவது அட்டையில் வெளியிடத் தீர்மானித்தோம் என்று இதழ் தொகுப்பாசிரியர் ராதிகா ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

# பிரித்தானியாவில் புயல்; 17ஆயிரம் மக்கள் பாதிப்பு

பிரித்தானியாவில் திடீரென வீசிய சூறாவளி புயலால், 17 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.



பிரித்தானியாவில் நேற்று முன்தினம் காலை திடீரென வானிலையில் மாற்றம் ஏற்பட்டதால், 130 கி.மீ. வேகத்தில் சூறாவளி புயல் வீசியுள்ளது.

மேலும் இடியுடன் கூடிய மழையும் பொழிந்ததால் இஸ்சல்ஸ (Esels) மற்றும் வடக்கே ஷெட்லாந்து (Shetland) தீவுப்பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தப்புயலினால் ஏராளமான மின்கம்பங்களும், மரங்களும் முறிந்து விழுந்துள்ளன. வீதிகளில் கார்களும், வாகனங்களும் காற்றின் வேகத்தில் தூக்கி வீசப்பட்டுள்ளன.

வீடுகளுக்குள் மழைவெள்ளம் புகுந்ததால் அப்பகுதி மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தற்போது இப்பகுதியில் மின் சாரத்தை சீர்செய்யும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருவதாக அந்நாட்டின் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

உலகச் செய்திகள்

# வெளியானது ரஜினியின் "லிங்கா"


தென்னிந்திய திரை உலகில்சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்தின் 64 ஆவது பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்ட நிலையில் அவர் நடித்த லிங்கா திரைப்படம் நேற்று வெளியானது.

ரஜினியின் சினிமா வாழ்க்கையில் அவர் பிறந்த நாளில் அவர் நடித்த புதுப்படம் வெளியாவது இதுவே முதல் முறையாகும். நேற்று அதிகாலை 1 மணிக்கு 'லிங்கா' படத்தின் முதல் காட்சி சென்னை திரை அரங்குகளில் திரையிடப்பட்டது. ரசிகர்கள் நள்ளிரவு முதலே கடும் குளிரையும், கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் திரை அரங்குகளில் கூடியிருந்தனர். ரசிகர்கள் அதிகாலை 1 மணிக்கு திரைஅரங்குகளில கேக் வெட்டி ரஜினியின் பிறந்த நாளைக் கொண்டாடினார்கள். சென்னை காசி திரை அரங்குகளில் ரஜினிகாந்த் பேஸ்புக் ரசிகர்கள் மன்றத்தினர் நூற்றுக்கணக் கானவர்களும், மற்ற ரஜினி ரசிகர் மன்றத்தினரும் திரண்டு இருந்தனர். அதிகாலை 1 மணி ஆனதும் அவர்கள் அங்கு 'கேக்' வெட்டி கொண்டாடினார்கள்.

4 ஆண்டுகளுக்குப் பிறகு ரஜினியின் 'ஆக்ஷன்' படம் வெளியானதால் திரை அரங்குகளில ரசிகர்கள் கூட்டம் திரண்டு இருந்தது. இதனால் திரை அரங்குகளில் திருவிழாக் கோலம் பூண்டு இருந்தது. திரை அரங்குகளில் வைக்கப்பட்டிருந்த ரஜினி பனருக்கு ரசிகர்கள் பாலாபிஷேகம் செய்து கொண்டாடினார்கள்.

ரஜினி படம் பார்க்க ஜப்பானில் இருந்து அவரது ரசிகர்கள் சென்னை வந்திருந்தனர். ஜப்பானியர்களான அவர்கள் திரை அரங்குகளில் முன் ரஜினி படபாடலை பாடியவாறு கொண்டாடினார்கள். பெங்களூரில் லிங்கா படம் திரையிடப்பட்ட திரை அரங்குகளில் ரசிகர்கள் பட்டாசு வெடித்து ஆரவாரம் செய்தனர்.

வேலூர் மாவட்டத்தில் 27 திரை அரங்குகளில் ரஜினி நடித்த லிங்கா படம் நேற்றுக்காலை ரிலீசானது. வேலூர் மாநகரில் மட்டும் இதுவரை இல்லாத அளவுக்கு 8 திரை அரங்குகளில் லிங்கா படம் வெளியாகி புதிய சாதனை படைத்துள்ளது.



## மைத்திரி பாலவால்....

ஜாதிக ஹெல உறுமய போன்ற தீவிரவாத சிங்கள-பௌத்த கட்சியுடன் கூட்டுச்சேர்வதன் மூலம், பல்வேறு இன மற்றும் மதங்களுக்கிடையில் இலங்கையில் தற்போது தீவிரமாகியுள்ள வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கம் சிறிசேனவுக்கு இல்லை என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு 'அனைத்துக் கட்சி அரசாங்கம்' ஆட்சி செய்யும் என எதிரணியின் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது ராஜபக்சவின் கூட்டணியிலுள்ள கட்சிகளும் அனைத்துக் கட்சி என்பதற்குள் உள்ளடங்கும். அனைத்துக் கட்சி ஆட்சி என்பது இலங்கையின் அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என்பதையே சுட்டிநிற்கிறது.

தொழிலாளர் வர்க்கம் மற்றும் இளையோர் மீதான புதிய கடும்போக்கான பொருளாதார சுமையானது நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சமூகக் குழப்பங்கள் ஏற்பட வழிவகுக்கும் என்கின்ற அச்சம் ஆளும் தரப்பிற்குள் நிலவுகிறது. 'தேசிய ஒற்றுமைக்கான அரசாங்கம்' என்பது தொழிலாளர் வர்க்கத்திலிருந்து எழும் எந்தவொரு எதிர்ப்புக்களையும் அடக்குவதற்கேற்ப கொழும்பு அரசியல் முறைமையை மாற்றிய மைத்தல் எனப் பொருள்படும்.

(நன்றி: World Socialist Web Site)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு காரைநகரில் வாழ்வாதார உதவி

## உதயன் எம்.பி. வழங்கினார்



(காரைநகர்)

தமிழ் மக்களின் துயர் துடைத்து அவர்களின் இன்னல்களும், குடும்ப சூழ்நிலைகளையும் அறிந்து அவை விலகிச்செல்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து தமிழ் மக்களுக்கு உறவுக் கரம் கொடுத்து எம் மக்களின் வாழ்வைச் செழிக்க வைப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

தமிழ் மக்களிற்கு வரமாக இறைவனால் வழங்கப்பட்ட வரப்பிரசாதமே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆவார் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், தீவக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

வாழ்வெழுச்சித்திட்டத்தினூடாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் வறிய குடும்பங்களிற்கு வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று காரைநகர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் எமது மக்களை காலம் காலமாக ஏமாற்றி வருகின்ற அரசியல்வாதிகளுக்கு மத்தியிலே எந்த இன்னல்கள் சூழ்ந்த போதும் மக்கள் மத்தியில் இருந்து நயவஞ்சகர்களின் விசமத்தனமான விமர்சனங்களிற்கு சளைக்காமல் தனது இணக்க அரசியலூடாக எம் மக்களிற்கு தேவையானவற்றைப் பெற்றுக் கொடுத்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆவார்.

தேர்தல் காலங்கள் நெருங்க ஒலிபெருக்கியை கரங்களில் ஏந்துபவர்கள் காலம் காலமாக மூளைசலவை செய்து மக்களை காரிருளிற்கே இழுத்துச் சென்றுள்ளார்கள்.

சுயநல அரசியல் வாதிகளின் முகத்திரை கிழித்தெறியப்பட்டு எமது மக்களின் அகவிழி திறக்கட்டும். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செல்லும் பாதையில் அனைவரினதும் பயணமும் தொடரட்டும் மக்கள் வாழ்வு ஒளிமயமாகும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று காரைநகரிலும் தேர்தல் கால அலுவலகம் ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் திறந்து வைத்தார்.

# தேர்தல் பிரசாரக் குழு வாகன விபத்தில் சிக்கியது

## மயிரிழையில் தப்பினார் அருண் தம்பிமுத்து

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளும் முகமாக ஜனாதிபதியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அருண் தம்பிமுத்து உட்பட 19 பேர், பயணித்த 3 வாகனங்கள் விபத்துக்குள்ளானதில், 7 பேர் படுகாயமடைந்து வைத்திய் சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மரப்பாலத்தில் நேற்று இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

அருண் தம்பிமுத்து உட்பட 19 பேரும் 3 வாகனங்களில் பயணித்தனர்.

இதன்போது, முன்னால் சென்ற இவர்களின் வாகனமொன்று பயணித்துக் கொண்டிருந்த போது, பின்னால் பயணித்த இரண்டு வாகனங்களில் ஒன்று மற்றொன்றை மோதி, முன்னால் சென்று கொண்டிருந்த வாகனத்தையும் மோதியதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தில் காயமடைந்த 7 பேரும் உடனடியாக கரடியனாறு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட தாகவும் பொலிஸார் கூறினர்.

இருப்பினும், ஜனாதிபதியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அருண் தம்பிமுத்து எந்தவித காயமின்றி மயிரிழையில் தப்பியுள்ளதா கவும் தெரிவிக்கப்படுகின்றது.

புதூரைச் சேர்ந்தவர்களான நா.சிவராசா (வயது-53), கே.பத்மநாதன் (வயது-53), உன்னிச்சையைச் சேர்ந்த கே.ஜெயரங்கநாதன் (வயது-49), திமிலைதீவைச் சேர்ந்த எஸ்.குமார் (வயது-36), ஏறாவூரைச் சேர்ந்த ஏ.சீனு (வயது-29), மாமாங்கத்தைச் சேர்ந்த ஜி.தெய்வேந்திரதாஸ் (வயது-50), கித்துளைச் சேர்ந்த கே.ஐயாத்துரை (வயது-58) ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

மேலும், இந்த விபத்தின் போது சேதமடைந்த வாகனங்கள் கரடியனாறு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

## தேர்தல் விதிகளை...

தேல்தல் சட்டங்களை மீறும் நடவடிக்கைகள் தொடர்பில் தகவல் வழங்குவதற்கு 0770700371 என்ற 24 மணித்தியாலமும் சேவையிலிருக்கும் துரித அழைப்பு இலக்கத்தையும், booklanka@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியையும் பொது எதிரணி அறிமுகப்படுத்தியுள்ளது.

பொது எதிரணி ஜனாதிபதி வேட்பாளரின் ஊடகப் பேச்சாளர்களான ஐக்கிய தேசியக் கட்சியின் மங்கள சமரவீர மற்றும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன ஆகியோர் கொழும்பு-7 இலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பின்போதே மேற்கூறப்பட்டவை அறிமுகம் செய்யப்பட்டது.

இதன்போது மங்கள சமரவீர எம்.பி. கருத்து வெளியிடுகையில், யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட கடந்த 5 வருட காலப் பகுதியில் யுத்தத்தை விற்றுத்தான் அரசு தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. அவ்வளவு தூரத்துக்கு அரசு வங்குரோத்தடைந்துள்ளது.

யுத்தத்தின் பின்னர் கடந்த 5 வருடங்களாக அரசு நாட்டு மக்களுக்கு எதுவும் செய்யவில்லை என்பது இதனூடாகத் தெளிவாகத் தெரிகிறது. நீரில் மூழ்கிய பெண்ணொருவரைக் காப்பாற்றி துஷ்பிரயோகம் செய்ய முடியாது. ஆனால், இந்த அரசோ மீட்டெடுத்த தாய்நாட்டை துஷ்பிரயோகம் செய்கின்றது. இதற்கு எம்மால் இடமளிக்க முடியாது. யுத்த வெற்றியை விற்று தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்வதனூடாக தமது தோல்வியை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. தேர்தல் நடவடிக்கைகளில் முழுமையாக அரச 'அதிகாரிகளை அரசு ஈடுபடுத்தியுள்ளது. அரச அதிகாரிகளை தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முடியாது. எனவே, தேர்தல் சட்டத்தை மீறும் அரச அதிகாரிகள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்க 'ப்ளெக் புக்' (கறுப்பு புத்தகம்) ஒன்றை நாம் அறிமுகம் செய்கின்றோம். தேர்தல் சட்டங்களை மீறும் அரச அதிகாரிகள் தொடர்பான தகவல்கள் இந்தப் புத்தகத்தில் சேர்க்கப்படும். தேர்தல் சட்டங்களை மீறும் அரச அதிகாரிகள் தொடர்பில் தகவல் கிடைத்தால், 0770700371 என்ற துரித அழைப்பு இலக்கத்தினூடாகவோ booklanka@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவோ தொடர்பு கொண்டு எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

உங்களால் வழங்கப்படும் தகவல் தொடர்பில் ஆராய்ந்து, உங்களால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய குறித்த நபரின் பெயர் மற்றும் விலாசம் உள்ளிட்ட தகவல்களை இந்தப் புத்தகத்தில் பதிவு செய்வோம். அத்துடன், இவ்வாறு கிடைக்கும் தகவல்களை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்புவோம். தேர்தல் சட்டங்களை மீறிய அரச் அதிகாரிகளுக்கு மட்டுமல்ல, அவர்களின் பிள்ளைகளுக்கும் வெளிநாட்டுத் தூதரகங்களில் வேலை வாய்ப்புக்களை வழங்கக் கூடாது எனக் கோரிக்கை விடுப்போம்.

மேலும், எமக்குக் கிடைக்கும் தகவல்களை தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிப்போம். ஆனால், 17 ஆவது திருத்தச் சட்டம் இல்லாததால் அவர் வெறும் பெயரளவில் மட்டுமே தேர்தல் ஆணையாளராக இருக்கின்றார். அதனால், தேர்தலின் பின்னர் இவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## விபத்தில்...

முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த விபத்து தொடர்பாக ஆராய்வதற்கு விசேட குழுவொன்றை நியமித்துள்ளதாக விமானப்படை அறிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றின் போது விமானப்படையின் பிரதான நிறைவேற்று அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் புலத்சிங்கள இதனை அறிவித்துள்ளார் (மேலதிக படங்கள் உள்ளே)

## பதவியேற்றார்...

பினராக பதவி வகித்த ஏ.எச். எம். அஸ்வர் பதவி விலகியதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அமீர் அலி நியமிக்கப்பட்டுள்ளார்.

அஸ்வர் கடந்த மாதம் 28 ஆம் திகதி தனது பதவியை இராஜினாமா செய்ததுடன், அந்தப் பதவியை அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## நிலையான...

அவ்வாறு மக்களின் ஒன்றிணைந்த ஆதரவின் மூலமே இன்றுள்ள அமைதிச் சூழலைத் தொடர்ந்து பாதுகாக்க முடியுமென்பதுடன் நீடித்த அரசியல் உரிமையையும், வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்திலும் மேம்பாடு காணமுடியும்.

நாம் எமது மக்களின் நலன்சார்ந்து பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தேசியம் பொய்யானதும் மாயையானதுமாகும். அதுமட்டுமன்றி மக்களுக்கான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் ஆற்றலும் அக்கறையும் இல்லாதவர்களாகவும் இருக்கின்றார்கள்.

கடந்த கால தமிழ்த்தலைமைகளுக்கு பல வாய்ப்புகள் கிடைத்த போதிலும் அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தாத காரணத்தினாலேயே எமது மக்கள் பல்வேறுபட்ட அவலங்களை எதிர்கொள்ள வேண்டி நேர்ந்தது. எமது மக்களின் வாழ்வாதாரத்தை ஒளிமயமானதாகவும், பயனுள்ளதாகவும் பெற்றுக் கொடுப்பது மட்டுமன்றி அரசியல் உரிமைகளையும் வென்றெடுக்கப்படல் வேண்டும். இதற்கு மக்கள் சரியான பக்கம் அணிதிரண்டு ஆதரவளிக்கும் பட்சத்தில் மேலும் பாரிய முன்னேற்றங்களைக் காண முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதில் கரவெட்டி பிரதேச செயலர் சிவசிறி கருத்துரையாற்றும் போது மகிந்த சிந்தனையை நோக்காகக் கொண்டு ஒரு கிராமம் ஒரு மில்லியன் திட்டத்திற்கு அமைவாக 20.7 மில்லியன் ரூபா கரவெட்டி பிரதேச செயலகத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடப்பாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியின் ஊடாக 33 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது பணிப்புரைக்கமைய இராஜகிராமத்தில் தடுப்பணை அமைக்கும் செயற்திட்டம் 175 இலட்சம் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் 65 இலட்சம் ரூபா செலவுக்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

இதில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), ஈ.பி.டி.பி.யின் பருத்தித்துறை பிரதேச இணைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பியின் கரவெட்டி பிரதேச இணைப்பாளர் செந்தில்நாதன், வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் கைலாஜனி, கரவெட்டி பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் சந்திரசேகரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஹிருணிகா...

சில நாட்களின் பின் நாடு திரும்பி, மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொள்வார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஹிருணிகா கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆளுங்கட்சியிலிருந்து விலகி, எதிரணியில் இணைந்து கொண்டார். பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதாக பகிரங்கமாகத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வானொலி...

தெய்வேந்திரம் டிலானி (வயது-23) என்ற இந்த அறிவிப் பாளர் தனது அலுவலகத்தில் இருந்து வீட்டிற்குச் செல்லும் போது, அரியாலைப் பகுதியில் வைத்து அவரது மோட்டார் சைக்கிளை தள்ளிவிழுத்தியதுடன், கழுத்தில் நெரித்து கொலை செய்வதற்காக முயற்சித்துள்ளார்.

மேற்படி தாக்குதலில் படுகாயமடைந்த அவர் அருகில் இருந்தவர்களினால் காப்பாற்றப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இத்தாக்குதல் தொடர்பாக யாழ்.பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (25)

## ஊடக...

கடந்த பல வருடங்களுக்கு முன்னர் இருந்து இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ஆகியவற்றால் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள வேண்டுகோளில் அடங்கியுள்ள விடயங்கள் உட்பட முக்கிய விடயங்களை நடைமுறைக்கு கொண்டு வருதல் என்பன இந்த வேண்டுகோள்களில் உள்ளடங்கும் விடயங்களாகும்.

அத்துடன் 1973 ஆம் ஆண்டின் இலங்கை பத்திரிகைப் பேரவை சட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் பத்திரிகைப் பேரவையை நடைமுறையில் இருந்து நீக்குதல் என்பனவும் இந்த வேண்டுகோள்களில் உள்ளடங்குகின்றன.

அவ்வாறே 1998 ஆம் ஆண்டின் கொழும்பு பிரகடனத்தில் உள்ளடங்கும் (2008 ஆம் ஆண்டு மீளாய்வு செய்யப்பட்டது) 'ஊடக சுதந்திரமும் சமூகப் பொறுப்புணர்வும்' என்ற விடயத்தின் அடிப்படையில் பிரகடனத்தில் சொல்லப்பட்ட விடயங்களை நடைமுறைக்கு கொண்டு வருவது தொடர்பாக 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி அபேட்சகர்களிடம் கையளிக்கப்பட்ட வேண்டுகோளில் உள்ளடக்கப்பட்ட விடயங்களும் இங்கு நினைவு கூறப்பட்டிருக்கின்றன.

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம், இலங்கை பத்திரிகை வெளியீட்டாளர் அழைப்பு, தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் தெற்காசிய் பிரிவு, இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் ஊடகவியலாளர் அமைப்பு மற்றும் ஊடகவியலாளர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளே மேற்படி ஜனாதிபதி அபேட்சகர்களிடம் சமர்ப்பித்துள்ள வேண்டுகோளில் கையொப்பமிட்டுள்ள பிரதிநிதிகளாவர்.

## பயணிகள் பஸ்...

தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்தப்பட்டதற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

சம்பவம் குறித்து பளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணை நடத்தினர்.

# மீனவர்கள் திரண்டு போராட்டம்; இந்திய மீனவர் அத்துமீறலுக்கு கண்டனம்

## முல்லைக்கடற்கரையில் நேற்று




(முல்லைத்தீவு)

இந்திய மீனவர்களின் வருகையில் தமது இறால் மற்றும் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி முல்லைத்தீவுப் பகுதி மீனவர்கள் நேற்று பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் நடவடிக்கைகளினால் தமது தொழிலை மேற்கொள்வதற்கு வசதியாக உரிய நடவ்டிக்கை அரசு எடுக்க வேண்டும் என முல்லை மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மைநாட்களில் பெரும் எண்ணிக்கையில் வருகை தருகின்ற இந்திய மீனவப் படகுகளினால், ஜனவரி மாத பருவகால இறால் மீன்பிடித் தொழில் கடந்த 3 வருடங்களாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரிடம் முறையிட்டுள்ள போதிலும் பிரச்சினைக்கு முடிவு ஏற்படாத காரணத்தினால், அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேரடியாகச் சந்தித்து தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறியதாகவும் முல்லைத்தீவு மீனவர்கள் கூறுகிறார்கள்.

அது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்திருக்கின்ற போதிலும், இந்திய மீனவர்களின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா தெரிவித்தார்.

மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துகின்ற போதிலும், அத்தகைய செயற்பாடுகள் முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெறாத காரணத்தினால், இலங்கைக் கடற்படையினரின் ஒத்துழைப்படன்தான் இந்திய மீனவர்கள் தமது கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் அத்துமீறி ஈடுபடுகின்றார்களோ என்று தமது மீனவர்கள் சந்தேகம் கொண்டுள்ளதாகவும் அந்தோனிப்பிள்ளை மரியராசா தெரிவித்தார்.

# குரங்குகளின் நாசவேலையை கட்டுப்படுத்துவது எப்படி

## தலையைக்குடையும் அதிகாரிகள்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் குரங்குகளது நடமாட்டத்தை கட்டுப்படுத்தி விவசாயிகளது உற்பத்திகளுக்கும் பொதுமக்களது உடைமைகளுக்கும் பாதுகாப்பளிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளினை அடுத்து யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடம், விவசாயத் திணைக்களம் மற்றும் வனவிலங்கு திணைக்களத்தினர் இணைந்து ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆரம்ப நடவடிக்கையாக இப்பிரதேசத்தினைச்சேர்ந்த 50 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு தென்மராட்சிப்பிரதேசத்தில் குரங்குகளது நடமாட்டம் எண்ணிக்கை போனற தகவல்கள் திரட்டுவதற்கான ஆலோசனைகள் வளங்கப்பட்டதுடன் அதற்கான உபகரணங்களும் வளங்கப்பட்டன.

இயற்கையாக பழுக்கவைக்கப்பட்ட பழம் மற்றும் பழரச விற்பனைநிலையமான மீசாலை- பழமுதிர்ச்சோலை மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் திட்ட இணைப்பாளர் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குரங்குகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மா, பப்பாசி, ஜம்புநாவல் வாழை போன்ற பழவகைகளை மட்டுமல்லாது முருங்கை, மரக்கறிவகை மற்றும் கிழங்குச் செய்கையும் குரங்குகளால்நாசம் செய்யப்படுவதுடன் வீட்டு ஓடுகள் சீற்களும் இவற்றினால் சேதமடைவதாக விவசாயிகளும் பொதுமக்களும் கவலை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (11)

# கலைவிழா இன்று

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய 20 ஆவது வருடாந்த கலை விழாவும் தரம் 1 இக்கு செல்லும் மாணவர்களுக்கான வழியனுப்பும் நிகழ்வும் இன்று 8.30 மணிக்கு தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நிலையத்தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி.சிவத்திரை சிவநாதன் கலந்துசிறப்பிக்கவுள்ளார். இதில் மாணவர் கௌரவிப்பும் கலைநிகழ்வுகளும் இடம்பெற உள்ளது. (11)

# திருமறைக்கலாமன்றத்தில் நாளை நத்தார் விழா

இளவாலை திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நத்தார் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் இளவலை றோ.க.த.க. பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இளவாலை திருமறைக்கலாமன்றத்தின் இளைஞர் அவை காப்பாளர் தே.லக்ஸ்மன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்றத்தின் இணைப்பாளர் யூ.சதீஸ் கலந்துகொள்வார்.

நத்தார் தினச்செய்தியை இளவாலை பங்குத்தந்தை ஜே.கியூ. ஜெயரஞ்சன் அடிகளார் வழங்குவார். கலைநிகழ்வுகள், பரிசளிப்புக்கள், சிறப்பு நாடகம் என்பவை இடம்பெறவுள்ளன என்றும், அனைவரையும் இவ்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு இளவாலை திருமறைக்கலாமன்றத்தினர் கேட்டுள்ளனர். (48)


**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, இலங்கை**

**செய்முறைப் பரீட்சை (சங்கீதம்/நடனம்)**

- இசைமாணி/நடனமாணி - 1ம், 2ம், 3ம் மற்றும் 4ம் வருடத் தேர்வு
- கலைமுதற்தேர்வு - 2011
- பொதுக் கலைமாணித்தேர்வு - பகுதி - I - 2011
- பொதுக் கலைமாணித்தேர்வு - பகுதி II - 2011

மேற்படி கற்கை நெறிகளில் சங்கீதம் மற்றும் நடன பாடத்திற்கான செய்முறைப் பரீட்சைகளை 22.12.2014 (திங்கட்கிழமை) தொடக்கம் இராமநாதன் நுண்கலைக் கழகம், மருதனார்மடத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் ஏற்கனவே வழங்கப்பட்ட பரீட்சைக்கான அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகள் ஏற்கனவே பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்,
12.12.2014 (C/3928)


# மாரடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)

மாரடைப்பால் பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் வைத்தியசாலைக்கு எடுத்துவரும்போது பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

பங்குறு வீதி, வட்டுக்கோட்டை, சங்கரத்தையைச் சேர்ந்த கணேசன் விஜயன் (வயது - 30) என்ற இளைஞரே இவ்வாறு திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

ஆட்டோ சாரதியான இவரது சடலம் நேற்று பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

# சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், குருநகர்ப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநகர் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகில் வீடொன்றிலிருந்து குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. நான்கு பிள்ளைகளின் தந்தையான அந்தோனி றோமன் (வயது - 55) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் யாரும் இல்லாத வேளை குறித்த நபர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்று தெவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# பாலத்தில் மோதியது ஆட்டோ; இரண்டுபேர் படுகாயம்

(மல்லாவி)

மல்லாவி புத்துவெட்டுவான் பகுதியில் நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆட்டோ ஒன்று பாலத்துடன் மோதியதில் இந்த விபத்து நேரிட்டுள்ளது. குணச்சந்திரன் குசேலன் (வயது - 21), தேறாங்கண்டல் என்ற முகவரியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தை கால் முறிந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்துடன்,

இராஜேந்திரம் சிந்துஜன் (வயது - 18) முறிகண்டி என்ற முகவரியைச் சேர்ந்தவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிகதிக்கப்பட்டுள்ளார்.

ஐயன்கண்குளம் பொலிஸார் இதுதொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (81)

# வருடாந்த விடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் வழமைபோன்று எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையிலான ஒருவாரகாலம் வருடாந்த விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும்.

வருடாந்த விடுமுறை முடிவுற்றதன் பின்னர் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வழமையான சேவைகள் அனைத்தும் இடம்பெறும்.

# சிறார்களுக்கு கௌரவம்

வேலணை துறையூர் ஐயனார் முன்பள்ளி மற்றும் கண்ணபுரம் கண்ணன் முன்பள்ளிச் சிறார்களைக் கௌரவிக்கும் நிகழ்வு துறையூர் ஐயனார் சனசமூக நிலைய மூன்றலில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

துறையூர் ஐயனார் சனசமூக நிலையத் தலைவர் க.கமலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக தீவக வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஆனந்தகௌரி குமாரதாஸன், சிறப்பு விருந்தினராக வேலணை பிரதே தவிசாளர் சி.சிவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வேலணை பிரதேச உபதவிசாளர் சி.கார்த்திகேசு, ஐயனார் வித்தியாலய அதிபர் திருமதி பு.இராசநாயகம், வேலணை கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் கி.சுவர்ணமதி, துறையூர் ஹரிஹரபுத்தி ஐயனார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மாதவராஜாசர்மா, துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆ.கனகசபை ஆகியோர் கலந்துகொள்ள்வுள்ளனர்.

இந்நிகழ்வில் முன்பள்ளி சிறார்களை கௌர்விக்கப்பட்டு, அவர்களின் கலைநிகழ்ச்சிகளும், பரிசில் வழங்கல் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (21)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.